# <u>சித்தன் அருள் – நவக்ரகங்கள்</u>




நாடியில் அகத்தியப் பெருமான் வந்து பலருக்கும் பரிகாரங்கள் சொல்கிற பொழுது நவக்ரகங்களை பற்றி நிறைய விஷயங்கள் பெருமையாக சொல்லியுள்ளார். அவற்றில், மிகச் சிறந்த விஷயம் என்பது, எல்லா கிரகங்களும் தாங்களுக்கு இறைவனால் இடப்பட்ட வேலையை மிகச் சரியாக செய்கின்றது என்பதே. ஆம்! மனிதனாக இவ்வுலகில் பிறந்து, ஆறறிவு பெற்றதால் மட்டுமல்லாமல், சரியாக சிந்தித்து, தர்மமே செய்து வந்தால், நவக்ரகங்கள் ஆசிர்வதிக்குமே அன்றி ஒரு பொழுதும் ச்ரமங்களை கொடுக்காது என்றும் கூறுகிறார்.

அப்படிப்பட்ட நவக்ரகங்களின் விரிவான விஷயங்களை பற்றி கூறியதை சூரியனிலிருந்து பார்ப்போம்.

**<u>சித்தன் அருள் - நவக்ரகங்கள் - சூரியன்</u>**



இந்த அற்புதமான பூமிக்கு அனுதினமும் கண்கண்ட தெய்வமாக காட்சி அளித்து, கஷ்டங்களை நீக்குபவன் சூரியன், வேதங்களும், இதிகாசங்களும், புராணங்களும் சூரியனுடைய புகழையும், வரலாற்றையும் பலவகையில் எடுத்துச் சொல்லுகின்றன. ரிக் வேதத்தில், அக்னிகள் மூன்று என்றும், அவற்றில் தலையாய அக்னியாக சூரியன் விளங்குகிறான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சூரியனுக்கு ஏழு பெயர்கள் உண்டு. அந்த ஏழு பெயர்களும், காரணப் பெயர்கள்.



1. இருளை அழிப்பதால் "சவிதா"
2. ஒளியை எல்லா உலகங்களுக்கும் விழச் செய்வதால் "பகன்"
3. ஒளியைக் கொடுத்ததோடு மட்டுமின்றி அந்த ஒளியின் காரணமாக பூமிக்கு உயிரையும் நல்ல உரத்தையும் தருவதால் "பூஷா"
4. வானம், பூமி, பாதாளம் ஆகிய மூன்று லோகங்களையும் தன் ஒளிக்கற்றையைக் கொண்டு அளப்பதால் "விஷ்ணு"
5. இரவில் தன் ஒளிப்பிழம்பைச் சுருட்டி, மடக்கி அமைதியாக மாறிவிடுவதால் "கேசி"
6. எல்லா மக்களின் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரிய ஒரே கண்கண்ட தெய்வம் போல் பவனி வருவதால் "வைசுவானரன்"
7. சிகப்பு நிறக்கதிர்களைத் தன்னிடமிருந்து வெளிபடுத்துவதால் ஒரு துடிப்பு மிக்க காலைக்குரிய வீரியத்தைப் பெற்று வலம் வருவதால் "வ்ருஷாகபி" என்று இப்படி ஏழு பெயர்களை உடையவர் சூரிய பகவான்.

சூரிய உதயத்திற்கு முன்பு "உஷாவை" மனைவியாகக் கொள்கிறான், நண்பகலில் சூர்யாதேவியையும், மாலை நேரத்தில் அல்லது சந்த்யாகாலத்தில் "வ்ருஷாக்"பாயினையும் சூரியன் மனைவியாகக் கொள்கிறான் என்பது ஐதீகம்.

ரிக் வேதத்தில் "நம்மை காப்பாற்றும் கண்கண்ட ஒரே கடவுள் சூரியன்தான். யாரை மறந்தாலும் பரவாயில்லை, தினமும் காலையில் சூரியனை வழிபட மட்டும் மறந்து போனால் அவனுக்குச் சொர்க்கம் கிடையாது" என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யஜூர் வேத காலத்தில் சூரியனைப் பற்றி சொல்லும் பொழுது "எல்லா உலகையும் ஒளிமயமாக ஆக்குபவன் நீ; உனக்கு தோல்வி என்பதே கிடையாது. நீ மகான், ஆதித்யன், உனக்கு சமமானவர் யாரும் இல்லை, இந்த உலகில்" என்று கூறப்பட்டுள்ளது.

சாம வேதத்தில் "உன்னிடம் நோய்களை குணப்படுத்தும் மகா சக்தி இருக்கிறது. துன்பத்தை ஒட்டுவாயாகா! பகையை விரட்டுவாயாக!



எங்களை காப்பாற்றுவாயாக" என்று பல இடங்களில் சூரியனைப் பற்றி பெரிதும் சொல்லியிருக்கிறது.

எல்லா மந்திரங்களுக்கும் மூல மந்திரம் ஒன்றுண்டு. அந்த மூல மந்திரத்திற்கு "தாயாக" விளங்கக் கூடியவள் "காயத்ரி". அந்த காயத்ரிக்குத் தெய்வம் "சூரிய பகவான்" என்பதை பார்க்கும் பொழுது சூரிய பெருமானின் மகிமை நமக்கு புலனாகும்.

சூரிய பெருமான் காச்யப முனிவருக்கும் அதிதிக்கும் பிறந்தவன். அதிதிக்குப் பிறந்த காரணத்தினாலோ என்னவோ அதிதியின் புத்திரன், ஆதித்தியன் என்று பெயர் விளங்கலாயிற்று.

பாரதத்தில் இன்னொரு கதையும் சொல்வதுண்டு. காச்யப முனிவருக்கும் அதிதிக்கும் பன்னிரண்டு குமாரர்கள் பிறந்தனர். அவர்கள் பன்னிரண்டு பேரும் பன்னிரண்டு விதமாகக் காணப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ராசி சொந்தமாயிற்று. அதனால் தான் பன்னிரண்டு ஆதித்தியர்கள் பன்னிரண்டு விதமாக நமக்கு அருள் பாலித்து வருகின்றனர். இவர்களில் தலையாய குமாரர் "சூரியன்".

தேவர்களுக்காக அமுதம் கடைந்த போது, ராகு பகவான் மறைவாக வந்து அந்த அமுதத்தை உண்டான். இதைக் கண்டு வெகுண்டு எழுந்தனர் அனைவரும். சூரியனும், சந்திரனும் "ராகு அமுதத்தை உண்கிறான்" என்று மற்றவர்களுக்கு காட்டினார்கள். மற்றவர்கள் கோபத்தால் ராகுவைத் துண்டித்துவிட்டனர்.

தன்னை காட்டிக் கொடுத்த சூரியனையும் சந்திரனையும் பழி வாங்கத் துடித்தான் ராகு. அதற்கேற்ற சமயத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். தகுந்த காலம் வந்ததும் ராகு, சூரியனை கவ்விப்பிடித்துக் கொண்டான். சூரியனது பலம் மறைந்தது. ஒளி மங்கியது. உலகம் இருண்டது.

அப்பொழுது சூரியன் நினைத்தான், "நான் தேவர்களுக்காகத் தானே அன்றைக்கு ராகுவைக் காட்டிக்கொடுத்தேன். இன்றைக்கு ராகுவின் கோபத்திற்கு ஆளாகி, துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரு



தேவராவது என்னை வந்து விடுவிக்க முயலவில்லையே! மரியாதைக்கு கூட ஏனென்று கேட்கவில்லையே! சே! என்ன நன்றி கெட்ட தேவலோகம்?" என்று வருந்தினான்.

சில மணி நேரம் கழித்து ராகு தன் கோபத்தை விட்டுவிட்ட பின், சூரியன் கடும் கோபம் கொண்டு "இனிமேல் எனது வெப்பம் இந்த அகிலத்தையே அழிக்கும், அதில் தேவர்களும் தப்ப முடியாது" என்று சொல்லிவிட்டு மறைந்து கொண்டான்.

சூரியன் மறைந்த போது உண்டான வெப்பத்தையே மூவுலகமும் தாங்க முடியவில்லை, இன்னும் சூரியன் நேரில் வந்து வெப்பத்தைக் காட்டினால் சர்வமும் சாம்பலாகப் போய் விடுமே" என்று பயந்தனர் தேவர்கள்.

எல்லோரும் பிரம்மதேவனிடம் சென்று, விஷயத்தைச் சொன்னார்கள். பிரம்மதேவர் யோசித்தார். பின்பு தேவர்களிடம் சொன்னார். "நீங்கள் கவலைப்பட வேண்டாம். இப்பொழுது இருள் நேரம். இன்னும் சில நாழிகையில் சூரியன் கோபத்தோடு உதிக்கும் பொழுது அந்த வெப்பத்தை தாங்கிக் கொள்ள பூ போன்ற இளம் குழந்தை ஒருவன் வருவான். அவன் பெயர் அருணன். இந்த அருணன், காச்யபருக்கும், வினதை என்ற அதிதிக்கும் பிறந்தவன். மிக்க பலவான். சிவ சொரூபி" என்று சொன்னார்.

மறுநாள் காலையில் சூரியன் உதிக்கும் பொழுது அந்த அக்னி கதிர்களை, "அருணன்" செங்கதிரோன் நேர் முன் அமர்ந்து அவனுடைய ஒளியைத் தான் எடுத்துக் கொண்டு மறைந்தான்.

அன்று முதல், சூரியனின் மறு அவதாரமாக அருணன் தோன்றி இன்று வரை உலகத்தை ரட்ச்சித்து வருகிறான் என்பது ஒரு வரலாறு.

மார்கண்டேய புராணத்தில் சூரியனுடைய வரலாறு என்பது "இருள் மயமான அண்டத்தை பிரம்மன் ஒருநாள் வேடிக்கையாக பிடித்த பொழுது "ஓம்" என்ற ஒலி உண்டாயிற்று. அந்த ஒலி பின்னர் செங்கதிர்



வீச்சாக மாறி, படிப்படியாக அதிலிருந்து வட்ட வடிவமான உருவத்தில் சூரியன் தோன்றினான் என்று சொல்லப்பட்டுள்ளது.

பிரம்ம புராணத்தில் "சிவபெருமான்தான் சூரிய மண்டலமாக ஒளிர்கிறார்: அவர் தான் "சூரியன்" அவருக்கு சூரியன் வலது கண்ணாக விளங்குகிறார்" என்று சொல்லப்பட்டுள்ளது.

சூரியனுக்கு இங்கு இரண்டு பிரசித்தி பெற்ற கோயில்கள் உண்டு. ஒன்று ஒரிசாவிலுள்ள "கோனார்க்" என்ற இடத்தில் சூரியனுக்கு சிறப்பான கோயில் உண்டு. இரண்டு தமிழ்நாட்டில் சூரியனார் கோவில் - ஆடுதுறையில் உள்ளது. இதை தவிர திருக்கண்டியூர் வீரட்டம், திருப்புறவார், பனங்காட்டூர் என்ற இடங்களிலும் சூரியனுக்கு தனித் தனி கோவில்கள் உண்டு.

சூரியனை நேரே நின்று வழிபடலாம். உருவம் அமைத்து வழிபடலாம், யந்திரத்தில் ஆவாகனம் செய்து பூசிக்கலாம். நிலத்தில் படம் வரைந்தும் பிரார்த்தனை செய்யலாம். சிவன் கோவிலில் பரிவார தேவதைகளில் ஒன்றாக வைத்து தினப்படி பூஜையும் செய்வது உண்டு.

நவக்ரகங்களில் ஒன்றாக வைத்து வலம் வந்து வணங்கும் வழக்கமும் எங்கும் காணலாம். தமிழ்நாட்டில் தைமாதப் பிறப்பாகிய மகர சங்கராந்தி அன்று சூரியனை வணங்கி, நிலத்தில் எழுதி பூசை செய்யும் வழக்கம் இன்றும் உண்டு

ஜோதிட சாஸ்த்திரத்தில் சூரியனை பற்றி சொல்லும் பொழுது, சூரியன் செம்பருத்திப் பூவை போல் இருப்பான், காச்யபரின் புதல்வன். மிகவும் பிரகாசம் உடையவன். இருட்டின் பகைவன், எல்லாப் பாவங்களையும் அழிப்பவன், பிரம்மன், விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளின் பிரதிநிதி. எப்பொழுதும் சஞ்சரிப்பவன், நவக்ரகங்களின் நாயகன், வேத மந்திரங்களில் காயத்ரி, சுயநிலை, சுய உணர்வு, செல்வாக்கு, கௌரவம், ஆற்றல், வீரம், பராக்கிரமம், சரீர சுகம், நன்னடத்தை, நேத்திரம், உஷ்ணம், ஒளி, அரசாங்க ஆதரவு ஆகியவற்றுக்கு காரணமானவன். பிதுர்காரகன், சாத்வீக குணம் கொண்டவன், இருண்ட சிவப்பு இவன் நிறம், ஆண் கிரகம்.

சூரியனுக்கு சொந்த வீடு சிம்மம். உச்சவீடு மேஷம். நீச வீடு துலாம். ரிஷபம், மகரம், கும்பம் மூன்றும் பகை வீடுகள். சூரியனுக்குச் சந்திரன், செவ்வாய், குரு மூவரும் நண்பர்கள்.

கிருத்திகை, உத்திரம், உத்திராடம் ஆகிய மூன்று நட்சத்திரங்களுக்கும் அதிபதி, நாயகன்.

ஒற்றை சக்கரம் கொண்ட தேரில் வேதத்தில் ஏழு சந்தங்களை ஏழு குதிரைகளைக் கொண்டு பூட்டி பவனி வருகிறான் சூரியன்.

- சூரியனுக்குரிய மலர் - செந்தாமரை.
- சூரியனுக்குரிய சமித்து - எருக்கு
- சூரியனுக்குரிய தான்யம் - கோதுமை
- சூரியனுக்குரிய வாகனம் - தேர்; மயில்
- சூரியனுக்குரிய அதிதேவதை - சிவன்
- சூரியனுக்குரிய ரத்தினம் - மாணிக்கம்
- சூரியனுக்குரிய உலோகம் - தம்பாக்கு
- சூரியனுக்குரிய நிறம் - சிகப்பு
- சூரியனுடைய அவதாரம் - ஸ்ரீராமர்



சூரியனிடமிருந்து வல்லமை பெற்று ஸ்ரீராமர் யுத்தத்தில் வெற்றி பெற, அகத்தியப் பெருமான், ஸ்ரீராமருக்கு ஆதித்ய ஹ்ருதயம் என்னும் ஸ்லோகத்தை உருவாக்கி உபதேசம் செய்தார். ஸ்ரீராமரும் யுத்தத்தில் எதிரிகளை வெற்றி கொண்டார். இந்த ஸ்லோகத்தை தினம் காலையில் சூரிய உதயத்தின் பொழுது பாராயணம் செய்து வந்தால் அவர்கள் முகம் தேஜஸ் பொருந்தியதாக இருக்கும், பீடைகள் ஒழியும், தரித்திரம் விலகும், உத்தியோகம் கிடைக்கும். பெற்றோர்கள் நல்லபடியாக இருப்பார்கள், டென்ஷன் இருக்காது, மங்களம் உண்டாகும்.



ஒருமுறை தேடிவந்த ஒருவருக்கு நாடி வாசித்த பொழுது அகத்தியப் பெருமான் அவரிடம் தினமும் ஆதித்ய ஹ்ருதயத்தை எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்க அருளினார்.

வந்தவர் "அய்யா! அந்த ஸ்லோகத்தை எப்பொழுது வேண்டுமானாலும் சொல்லலாமா?" என்று வினவினார். ஏன் என்றால் அவர் கேட்டு வளர்ந்த சூழ்நிலையில், எல்லோரும், அந்த ஸ்லோகத்தை சூரிய உதயத்தின் பொழுது மட்டும் தான் சொல்லலாம். அஸ்தமனத்துக்குப் பின் அல்லது மதியத்துக்குப் பின் சொல்லக் கூடாது என்று தெரிவித்திருந்தனர்.

இதை அறிந்த அகத்தியப் பெருமான் "என்னிடமே இப்படி கேட்கிறாயே. நேரம் காலம் பார்க்காமல், நடக்கும் பொழுதும், பயணிக்கும் பொழுதும், அமர்ந்திருக்கும் பொழுதும் எப்பொழுது வேண்டுமானாலும் இதை கூறலாம்" என்று அருளினார்.

சாதாரண மனிதர்களுக்கு இதை மனப் பாடம் செய்வது சற்று ஸ்ரமமாக தோன்றும். உண்மை அதுவல்ல. அகத்தியப் பெருமானிடம் வேண்டிக் கொண்டு, இதை கூறி வந்தால், ஒரு சில நாட்களிலேயே மனப்பாடம் ஆகிவிடும். பின்னர் எந்த கோவிலுக்கு சென்றாலும், அந்த கோவிலின் ஈசான மூலையில் வடக்கு, வடகிழக்கு அல்லது  கிழக்கு நோக்கி அமர்ந்து மூன்று முறையேனும் ஜெபித்திட, மிக விரைவில் நம் வேண்டுதல்கள் நிறைவேறுவதை காணலாம். மேலும் எங்கு சென்றாலும் நல்ல பாதுகாப்பு இருக்கும்.

ஆதித்ய ஹ்ருதயம் உருவான நிலை:- அகஸ்திய மகரிஷிக்கு உலகை பற்றி கவலை அதிகமாக ஏற்பட்டது. இப்போதே இப்படி அநீதிகள் தலைவிரித்தாடுகிறதே இனி போகப்போக எப்படி இருக்குமோ? என்ற கவலை பயத்தை கொடுத்தது. இதற்கு தீர்வு காண முயற்சி எடுத்தார். அநியாயங்கள் பெருகாமல் அதை தடுப்பதும் தட்டி கேட்பதும் பெண்களாகதான் இருப்பார்கள். ஆகவே பராசக்தியிடம் முறையிடுவோம் என்ற எண்ணத்துடன் தேவியை அணுகி தன் மன கவலைகளை கூறினார் அகஸ்தியர்.



நல்ல உள்ளமும், மன தைரியமும் கொடுக்க கூடிய ஆற்றலும் சக்தியும், “ஆதித்ய ஹருதய“த்திற்கு இருக்கிறது என்று கூறினாள் பராசக்தி. எந்த ஒரு நல்ல விஷயத்தையும் முதலில் நல்லவர்களிடம் சொன்னால்தான் அது முழுமை அடையும் என்ற எண்ணத்தால் பல வருடம் ஆகியும் மந்திரத்தை வெளியிடாமல் பொறுமையாக இருந்தார், அகஸ்திய முனிவர்.

ஸ்ரீ ராமசந்திரர், இராவணனிடம் போர் செய்து கொண்டு இருந்தார். பல அம்புகளை ஏவியும் இராவணனை கொல்ல முடியாமல் மிகவும் மன வேதனையில் இருந்தார். இராவணனும் முடிவில்லாத போரினால் மயங்கி விழுந்தார். ஆனாலும் இராவணன் போரை நிறுத்துவதாக இல்லை. இன்னும் எத்தனை மணி நேரமோ, எத்தனை நாட்களோ இப்படி போரை தொடர்வது? என்ற விரக்தியின் எல்லைக்கே போனார் ஸ்ரீராமர். இறைவனாக இருந்தாலும் மனித பிறவி எடுத்தால் விதியை அனுபவித்துதான் தீர வேண்டும். ஆனால் விதியை ஒரளவு மாற்றும் சக்தி முனிவர்களுக்கு இருக்கிறது என்பதால் தன் குருவாக நினைக்கும் அகஸ்தியரை மனதால் பிராத்தனை செய்தார். பிராத்தனைக்கு நிச்சயம் பலன் கிடைக்கும் என்பது போல் அகஸ்திய முனிவர் ஸ்ரீராமரின் முன்னே தோன்றி, “ராமா… உலக நன்மைக்காக பராசக்தி ஆதித்ய ஹிருதய மந்திரத்தை எனக்கு உபதேசித்தார். அதை உனக்கு உபதேசிக்கிறேன். இந்த மந்திரத்தை உச்சரித்தால் சகல நன்மைகளும், விரோதிகளை வீழ்த்தும் சக்தியும் கிடைக்கும்.!“ என்றார் அகஸ்திய முனிவர்.

முனிவர் கூறியது போல் ஆதித்ய ஹிருதய மந்திரத்தை உச்சரித்தார் ஸ்ரீ ராமசந்திரர். அதன் பலனாக அதிக சக்தியும், புத்துணர்ச்சியோடும் இராவணனை வீழ்த்தினார். சூரியனுக்கு உகந்த ஆதித்ய ஹிருதய மந்திரத்தை உச்சரித்தால் வல்லவனுக்கு வல்லவனாகலாம் என்றார் சக்திதேவி

அந்த ஸ்லோகத்தை கீழே தருகிறேன்.

ததோ யுத்த பரிச்ராந்தம் ஸமரே சிந்தயா ஸ்திதம்
ராவணம் சாக்ரதோ த்ருஷ்ட்வா யுத்தாய ஸமுபஸ்திதம்



தைவதைச்ச ஸமாகம்ய த்ரஷ்டுமப்யாகதோ ரணம்
உபாகம்யாப்ரவீத் ராமம் அகஸ்த்யோ பகவாந் ருஷி:

ராம ராம மஹாபாஹோ ச்ருணு குஹ்யம் ஸநாதனம்
யேந ஸர்வாநரீன் வத்ஸ ஸமரே விஜயஷ்யஸு

ஆதித்யஹ்ருதயம் புண்யம் ஸர்வ சத்ரு விநாசநம்
ஜயாவஹம் ஜபேந்த்யம் அக்ஷய்யம் பரமம் சிவம்

ஸர்வ மங்கள மாங்கல்யம் ஸர்வ பாப ப்ரணாசநம்
சிந்தாசோக ப்ரசமனம் ஆயுர்வர்த்தநம் உத்தமம்

ரச்மிமந்தம் சமுத்யந்தம் தேவாஸுர நமஸ்க்ருதம்
பூஜயஸ்வ விவஸ்வந்தம் பாஸ்கரம் புவநேச்வரம்

சர்வதேவாத்மகோ ஹ்யேஷ தேஜஸ்வி ரச்மிபாவந:
ஏஷ தேவாஸூரகணான் லோகான் பாதி கபஸ்திபி:

ஏஷ பிரஹ்மா ச விஷ்ணுச்ச சிவ: ஸ்கந்தக: ப்ரஜாபதி:
மஹேந்த்ரோ தநத: காலோ யமஸ்-ஸோமோஹ்யபாம்பதி:

பிதரோ வஸவஸ்ஸாத்யா: ஹ்யச்விநௌ மருதோ மநு :
வாயுர் வஹ்; ப்ரஜா ப்ராண க்ரதுகர்தா ப்ரபாகர :

ஆதித்ய: ஸவிதா ஸூர்ய: கக : பூஷா கபஸ்திமான்
ஸுவர்ணஸத்ருசோ பாநு: ஹிரண்யரேதா திவாகர:

ஹரிதச்வ: ஸஹஸ்ரார்ச்சி: ஸப்தஸப்திர் மரீசிமாந்
திமிரோந்மதந்: சம்பு: த்வஷ்டா மார்த்தாண்ட அம்சுமான்

ஹிரண்யகர்ப்ப: சிசிர: தபரோ பாஸ்கரோ ரவி:
அக்கர்ப்போ (அ)திதே: புத்ர: சங்க: சிசிர நாசந:

வ்யோமாநாதஸ் - தமோபேதீ ருக்யஜுஸ்ஸாமபாரக:
கநவ்ருஷ்டிரபாம் மித்ரோ: விந்த்யவீதீ ப்லவங்கம:

**ஓம் ஸ்ரீ அகத்தீசாய நமஹ!**
**சித்தன் அருள் வலைப்பூ!**



ஆதபீ மண்டலீ ம்ருத்யூ: பிங்கல: ஸர்வதாபந:
கவிர்விச்வோ மஹாதேஜா ரக்த: ஸர்வபவோத்பவ:

நக்ஷத்ர க்ரஹதாராணாம் அதிபோ விச்வபாவந:
தேஜஸாமபி தேஜஸ்வீ த்வாதசாத்மன் நமோ (அ)ஸ்து தே

நம: பூர்வாய கிரயே பஸ்ச்சிமே கிரயே நம:
ஜ்யோதிர்கணாநாம் பதயே திநாதிபதயே நம:

ஜயாய ஜயபத்ராய ஹர்யச்வாய நமோ நம:
நமோ நம: ஸஹஸ்ராம்சோ ஆதித்யாய நமோ நம:

நம உக்ராய வீராய ஸாரங்காய நமோ நம:
நம: பத்மப்ரபோதாய மார்த்தாண்டாய நமோ நம:

பரஹ்மேசாநாச்யுதேசாய ஸூர்யாயா யாயாதித்யவர்ச்சஸே
பாஸ்வதே ஸர்வபக்ஷிய ரௌத்ராய வபுஷே நம:

தமோக்நாய ஹுமக்நாய சத்ருக்நாயாமிதாத்மநே
க்ருதக்நக்நாய தேவாய ஜ்யோதிஷாம் பதயே நம:

தப்தசாமீகாரபாய வஹ்நயே விச்வகர்மணே
நமஸ்தமோபிக்நாய ருசயே லோகஸாக்ஷிணே

நாசயத்யேஷ வை பூதம் ததேவ ஸ்ருஜதி ப்ரபு :
பாயத்யேஷ தபத்யேஷ வர்ஷத்யேஷ கபஸ்திபி:

ஏஷ ஸூப்தேஷு ஜாகர்தி பூதேஷூ பரிஷ்டித:
ஏஷசைவாக் ஹோத்ரம் ச பலம் சைவாக்ஹோத்ரிணாம்

வேதச்ச க்ரதவச்சைவ க்ரது-நாம் பலமேவ ச
யா க்ருத்யா லோகேஷூ ஸர்வ ஏஷ ரவி: ப்ரபு:

ஏநமாபத்ஸூக்ரேஷூ காந்தாரேஷூ பயேஷூ ச
கீர்த்தயன் புருஷ: கச்சித் நாவாஸூததி ராகவ

**ஓம் ஸ்ரீ அகத்தீசாய நமஹ!**
**சித்தன் அருள் வலைப்பூ!**



பூஜயஸ்வைந மேகாக்ரோ: தேவதேவம் ஜகத்பதிம்
ஏதத் த்ரிகுதம் ஜபத்வா யுத்தேஷு விஜயஷ்யஸு

அஸ்மின் க்ஷணே மஹா பாஹோ ராவணம் த்வம் வதிஷ்யஸு
ஏவமுக்த்வா ததாகஸ்த்யோ ஜகாம ச யதாகதம்

ஏதத் உத்வா மஹாதேஜா நஷ்டசோகோ (அ)பவத் ததா
தாராயாமாஸ ஸ"ப்ரிதோ: ராகவ: ப்ரயதாத்மவான்

ஆதித்யம் ப்ரக்ஷ்ய ஜபத்வா து பரம் ஹர்ஷமவாப்தவான்
த்ரிராசம்ய சுசுர் பூத்வா தநுராதாய வீர்யவான்

ராவணம் ப்ரேக்ஷ்ய (அ)ஹ்ருஷ்டாத்மா யுத்தாய ஸமுபாகமத்
ஸர்வயத்நேந மஹதா வதே தஸ்ய த்ருதோபவத்

அத ரவிரவதந் நிரீக்ஷ்ய ராமம் முதிதமநா: பரமம் ப்ரஹ்ருஷ்யமாண:
நிசிசரபதி ஸம்க்ஷயம் விதித்வா ஸுரகணமத்யகதோ வசஸ்த்வரேதி

என்று கூறிய அகஸ்திய மாமுனி இறுதியாக "இரகு குலத்தில் உதித்தவனே! சூரிய பகவானை மேற்கண்ட துதிகளால் போற்றுபவனுக்கு சிக்கலான நேரங்களிலும், சோதனை காலங்களிலும் பயத்தை ஏற்படுத்தக்கூடிய காலங்களிலும்.எந்த துன்பமும் ஏற்படுவதில்லை. தெய்வங்களினாலேயே போற்றப்படுகின்ற அந்த சூரிய பகவானை முனைப்புடன் கூடிய ஒருமித்த மனத்தோடு, மூன்று முறைகள், மேற்கண்ட துதிகளின் மூலமாக வழிபட்டு வருபவன், யுத்த களத்திலே வெற்றியே காண்பான் என்று அகஸ்திய முனிவரால் அருளப் பெற்ற இந்த அற்புத துதியை, மனதை அடக்கியவரும். பேராற்றல் பெற்றவரும் பெரும் தோள் வலிமை பெற்றவருமான ஸ்ரீ ராமர் சூரிய பகவானை பார்த்தவாறே மூன்று முறைகள் ஜபித்து ராவணனை வென்ற இந்த மந்திரம் மிகவும் சக்தி வாய்ந்ததும், நம் பாவங்களையெல்லாம் போக்க வல்ல சிறந்த பரிகார மந்திரமான இந்த ஆதித்ய ஹ்ருதயம் என்ற மஹா மந்திரத்தை நாமும் துதித்து நன்மை அடைவோமாக!

## சித்தன் அருள் - நவக்ரகங்கள் - சந்திரன்!



சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று, உலகிற்கு ஒளியைத் தருபவர் சந்திரன். இதனால் சந்திரனுக்கு "தண்கதிரேசன்" என்று பெயர்.

இவருடைய சொரூபம் பால்போல் வெளுத்த நிறம். வெண்மையான ஆடை. வெண்பூ, முத்துமாலையை அணிந்தவர். பத்து வெண்குதிரை பூட்டிய தேரில் வெண்குடையின் கீழ் அமர்ந்து மேருவை வலம் செய்பவர் என்று வேதங்களில் சொல்லப்பட்டுள்ளது.



சந்திரனுக்கு அதிதேவதை வருணன். ப்ரத்யாதி தேவதை "கௌரி". இதைத்தவிர இன்னும் பல குட்டி தேவதைகளும் உண்டு.

"சந்திரக்காந்த கல்" என்று ஒரு விசேஷமான கல் உண்டு. இந்தக் கல்லில் சந்திரன் ஒளி பட்டவுடன் அதிலிருந்து நீர் வரும்.

பாற்கடலை தேவர்களும், அசுரர்களும் கடைந்த போது அவதரித்தவர் சந்திரன். இவர் தேவியின் அம்சமாக கருதப்படுகிறார். ஆனாலும் சந்திரன் பெண்பால் குணத்தோன்.

பசு, பால், ஔஷதம், புஷ்பம், பயிர், மது, கீர்த்தி இவைகளை விருத்தி செய்பவர். இவர் சூரியனுக்கு அருகே செல்லும் பொழுது அமாவாசை ஆகிறார். சூரியனை விட்டு எதிர் பக்கம் போகும் பொழுது பௌர்ணமியாக காட்சி தருகிறார்.

பாற்கடலை கடைந்தபோது லக்ஷ்மியுடன் தோன்றியவர் என்பதால் லக்ஷ்மியின் சகோதரர் என்று வேதங்களால் போற்றப்படுகிறார்.

சிவபெருமான் தலையிலும் அம்பிகையின் சிரசிலேயும் இடம் பெற்ற புண்ணியவான். இவரை வளர்த்தவர் அத்ரி மகரிஷி.

குருபகவானது கருணைக்குப் பாத்திரமானதால், இவருக்கு குருவும் சேர்ந்து ஔஷதிகளுக்கு அரசனாக இருக்கும் பதவியைக் கொடுத்தார்கள்.

ஜோதிட சாஸ்த்திரத்தில் "2" என்கிற எண்ணை இவர் ஆளுமைக்கு உட்பட்டதாக கூறப்படுகிறது.

சதபதப் ப்ராம்மணத்தில் சந்திரனைப் பற்றிக் கூறும்பொழுது "வானத்தில் இருந்த சோமனை காயத்திரி தேவியின் அருளினால் தேவர்கள் பூமிக்கு கொண்டு வந்தார்கள்" என்று எழுதப்பட்டுள்ளது.

சோமன் என்னும் அரசன் கந்தர்வனிடம் இருந்தான். அவனை கந்தர்வன் நண்பனாகப் பெற்றதால் முனிவருக்கும் தேவர்களுக்கும் பயம்

ஏற்ப்பட்டது. எனவே ஒரு பெண்ணை அனுப்பி கந்தர்வனை மயக்கி, சோமனை, கந்தர்வனிடமிருந்து பிரித்து தாங்கள் பத்திரமாக வைத்துக் கொண்டார்கள் என்று ஐதரேயத்தில் கூறப்பட்டுள்ளது.

சந்திரனை சிவபெருமானின் இடது கண் என்று கூறுவார்கள்.

தைதீர்யத்தில், பிரஜாபதிக்கு முப்பத்து மூன்று பெண்கள். இந்த பெண்கள் அனைவரையும் பிரஜாபதி சோமனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். அவர்களிடம் சோமனுக்கு "ரோகிணியிடம்" மாத்திரம் அன்பு பிறந்தது. மற்றவர்களை புறக்கணித்தான்.

பிரஜாபதியிடம் சென்ற மற்ற பெண்கள், முறையிட்டனர். அதனால் சந்திரன் ப்ரஜாபதியின் கோபத்துக்கு ஆளானான். அதன் காரணமாக உடல் குறைந்து தேய்ந்து போனான். பின்னர், சந்திரன் தன் தவறை வருந்தி, சூரியனிடம் உதவி கேட்க, சூரியன், சந்திரனை உடல் வலிமை உடையவனாக மாற்றினான்.

இன்னொரு கதையில், ஔஷதிகளுக்கு அரசனாக சந்திரன் இருந்த பொழுது ராஜ சூய யாகம் செய்தான். அப்பொழுதுதான் தக்ஷப் பிரஜாபதி என்பவர் தனது 27 குமாரிகளையும் சந்திரனுக்கு மணமுடித்துக் கொடுத்தார். சந்திரன் ரோகிணியைத் தவிர மற்றவர்களை விரும்பவே இல்லை. மற்ற பெண்களின் கவலையை அறிந்த தக்ஷப் பிரஜாபதி, சந்திரனை அழைத்துச் சாபமிட்டார். அதனால்தான் தேய்ந்து போனான் சந்திரன்.

பரமசிவன், சந்திரனுடைய துர்பாக்கிய நிலையை கண்டு, வருந்தி, பதினைந்து நாள் தேய்பிறையாகத் தேய்ந்து போனாலும் அடுத்த பதினைந்து நாட்களில் வளர்பிறையாக மாறுவாய் என்று அனுக்ரஹித்தார்.

அதனால் தான் சந்திரனுக்குப் பதினைந்து நாள் தேய்பிறை, பதினைந்து நாள் வளர்பிறை வருகிறது.



சந்திரனின் மனைவிகளில் ஒருத்தி சுவாதி. நட்சத்திரமாக ஜொலிப்பவள். இந்த நட்சத்திரத்தன்று, சமுத்திரத்திலுள்ள மீன் வர்க உயரினம் ஒன்று வாய் திறந்து மேல் நோக்கி இருக்கும் சமயத்தில் மழைத்துளி விழுமாயின் அந்த மழைத்துளி முத்தாக வளரும் என்பது நடைமுறை செய்தி.

ஏன் சந்திரனுக்கு இத்தனை மனைவிகள்? என்பதற்கு காரணம், முன்பொரு சமயம் பூர்வத்தில் ப்ரஹஸ்பதியான குருவிடம் சிஷ்யனாக இருந்து த்யானயோகத்தில் யாரும் அடைய முடியாத சித்தியை பெற்றவன்.

எனவே, அவன் யாரை நினைத்தாலும் அவளை மணந்து கொள்ளலாம்; அல்லது சந்திரனைப் பார்க்கின்ற அத்தனைப் பெண்களும் அவன் மீது ஆசைப் படுவார்கள். அதனால் தான் சந்திரனுக்கு இத்தனை மனைவிகள் என்று கூறப்படுகிறது.

சந்திரனை பெண் ஸ்வரூபமாக வர்ணிக்கிறார்கள். சூரியன் புருஷனாகவும் சொல்லப்படுவதுண்டு. பூமி மாதாவால் விரும்பப்படுபவன். அதனால், பூமிக்கும் சந்திரனுக்கும் இடையே காந்த சக்தி உண்டு என்பார்கள்.

செடி, கொடி, தாவர வளர்ச்சிக்கு சந்திரன் வேண்டும்.

எல்லா ஜீவராசிகளின் காதல் உணர்ச்சி, சந்திர கிரணங்களை நம்பித்தான் இருக்கிறது. சமுத்திரத்திலிருந்து "ஆவி" உண்டாகவும் சந்திர ஒளி தேவை. பிறைசந்திரனை தொழுது வந்தால் நமக்கு ஆயுள் அதிகரிக்கும்.

சந்திரன் தலையைச் சுற்றி ஒளி வட்டமாகிய ப்ரபை திகழும். பல்வகை அணிகள் அணிந்திருப்பான். பன்னீர் மலர் மாலையை அணிந்தவன். வெண்மை ஆடையை அணிந்த அவன், குமுதத்தை ஏந்திய இரண்டு திருக்கரங்களை உடையவன். திருமார்பில் பொன்னூல் இழையும்.



ராமர் சூரிய குலத்தில் தோன்றியவர். அது போல பாண்டவர்கள் சந்திர குலத்தில் தோன்றியவர்கள்.

மனிதர்களின் சரீர பலத்துக்கு காரணமே இவர் தான். கடல் பயணம் நன்றாக அமைய வேண்டும் என்றால், ஒருவருக்கு சந்திரன் நன்றாக் ஜாதகத்தில் இருக்க வேண்டும்.

ராகு, கேது கிரகங்களை தவிர யாரும் பகைவர்கள் கிடையாது. குரு, சுக்கிரன் இவர்களோடு சந்திரன் சேர்ந்தால், அல்லது சுப பார்வை பார்க்கப்பட்டாலும், அவர் மிகப்பெரிய அதிர்ஷடசாலியாக பிற்காலத்தில் மாறுவார்.

ரிஷபம் சந்திரனுக்கு உச்ச வீடு. கடகம் சொந்த வீடு. விருச்சிகத்தில் நீசனாக மாறிவிடுவார்.

ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் ஆகிய மூன்று நட்சத்திரங்களுக்கும் நாயகன் சந்திரன். நவரத்னங்களில் "முத்து", உவர்ப்பு சுவை, இனிமையான குணம், வடமேற்கு திசை இவைகளை கொண்ட சந்திரன் பொதுவாக சுபக்ரகம்.

நிம்மதியாக தூங்க வேண்டும் என்றாலோ, அரசாங்கத்திடமிருந்து விருது பெறவேண்டும் என்றாலோ, ஒருவருக்கு சந்திரன், ஜாதகத்தில், நல்ல இடத்தில் இருக்க வேண்டும்.

காதல், கவித்துவம், மென்மை, இன்பம், இதயம் என்ற நளினமான பல விஷயங்களுக்கும் காரணமானவன்.


இறைவனது திருவிழிகளில் ஒரு விழியாக விளங்கும் இவனைத்தான் மூலிகைகளுக்கு அதிபதியாக பிரம்மா நியமித்திருக்கிறார்.

ஆலயங்களில் பரிவார தேவதையான சந்திரன், இரண்டு சக்கரங்கள் கொண்ட தேரில் இருப்பவன். சதுரமான பீடத்தில் அமர்பவன். கார்த்திகை மாதம் சோமவாரத்தில் இவர் அவதரித்ததாக கூறப்படுகிறது.



**"பத்மத்வஜாய வித்மஹே ஹேம ரூபாய தீமஹி**
**தன்னோ சோம ப்ரசோதயாத்"**

என்ற இவரது காயத்திரி மந்திரத்தை தினமும் காலையில் 27 முறை ஜெபித்து வந்தால், எல்லோரும் அதிர்ஷ்டம் அடையலாம்.




கோயில்களில் காணப்படும் வீரபத்திரரே அங்காரகன் என்று சொல்வதுண்டு. வீரபத்திரரின் பிறந்தநாள், செவ்வாய்க்கிழமை ஆகும்.

பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர், செவ்வாய். அவந்தி நாட்டிற்கு அதிபதி. வேல், கதை, சூலம், கட்கம் வைத்துள்ள நான்கு கைகளை உடையவர்.

அக்னி நிறத்தோடு காணப்படும் சிவந்த ஆடை, செந்நிறப்பூவையும், பவளத்தையும் அணிந்தவர்.

எட்டு சிவப்பு ஆடுகள் பூட்டிய ரதத்தில் ஏறி, மேருமலையை வலம் வருபவர். இவருடைய மகிழ்ச்சி நமக்கு கிடைக்க வேண்டுமானால், பூமாதேவியையும், முருகப் பெருமானையும் தினம் வலம் வந்து த்யானிக்க வேண்டும்.

இவருடைய இருப்பிடம் சூரியனுக்குத் தெற்கில், திரிகோண மண்டலத்தில் தெற்கு முகமாக வீற்றிருப்பவர், என்று வரலாறுகள் கூறுகின்றது.

சிவபெருமான் யோகத்திலிருந்த பொழுது, அவருடைய நெற்றிக் கண்ணில் வியர்வை உண்டாகி அது பூமியின் மீது விழுந்தது. அந்த வியர்வையே பின்னர் ஆண் குழந்தையாக மாறியது. பூமாதேவி அந்தக் குழந்தையை எடுத்து வளர்த்தாள். முருகப்பெருமானின் சகோதரர் இவர் என்பதால் "செவ்வாய்" என்ற, அங்காரகனை முருகப் பெருமானின் அம்சமாக வளர்த்து வந்தார் என்பதும் ஒரு புராணக் கதை.

மற்றொரு கதையும், செவ்வாயை பற்றி கூறப்படுவதுண்டு.

பாரத்வாஜ மகரிஷி நதி தீரத்தில் மிக அழகான ஒரு பெண்ணைக் கண்டார். அவளது அழகும், சொந்தர்யமும், பரத்வாஜ மகரிஷிக்கு மனத்தைக் கலக்கியது.

எவ்வளவோ முறை தன் மனத்தைக் கட்டுப்படுத்திப் பார்த்தும் அவரால் அவள் மீது கொண்ட ஆசையை மாற்ற முடியவில்லை.

அவரது உடலில் இருந்து "ரேதஸ்" பூமியில் விழுந்தது. பின்னர் அந்த "ரேதஸ்" ஒரு ஆண்குழந்தையாக உருமாறிற்று. பூமாதேவி அந்த ஆண் குழந்தையை எடுத்து வளர்த்தாள். அந்த குழந்தைக்கு பௌமன் என்ற திருநாமம் வழங்கப்பட்டது. பௌமன் இறைவனை நோக்கி நீண்டகாலம் கடும்தவம் இயற்றினான். அவனுடைய தவவலிமையைக் கண்டு, நவக்ரகத்தில் ஒரு கிரகமாக மாற்றி, அவனுக்கு "அங்காரகன்" என்ற மற்றொரு பெயரும் வழங்கப்பட்டது.

லிங்கபுராணம் அங்காரகனின் பிறப்பை வேறுவிதமாக கூறுகிறது.



அக்னிக்கும், விகேசிக்கும் அன்யோன்ம் உண்டு. இந்த அன்யோன்யத்தால் விகேசி ஒரு ஆண்குழந்தையை பெற்றெடுத்தாள். அந்த ஆண்குழந்தை அக்னியின் குணத்தைப் பெற்றிருந்தமையால், அதற்கு "அங்காரகன்" என்று பெயரிட்டனர்.

"தக்கன்" என்ற புண்ணியர் ஒரு யாகம் நடத்தினார். அதை விட தன்னால் செய்து காட்ட முடியும் என்று வீரபத்திரர் தன் புண்ணிய பராக்ரமங்களைக் கொண்டு "மகாயாகம்" செய்தான்.

அந்த யாகம் கண்டு உலகெங்கும் நடுநடுங்கின. என்ன ஆகுமோ, ஏது நடக்குமோ என்று பயந்து, வீரபத்திரனிடம் வந்து, "இந்த பயங்கர யாகம் வேண்டாம்" என்று கெஞ்சி கேட்டனர்.

வீரபத்திரன், தன் அதிபயங்கரமான ரூபத்தை மாற்றி, அழகான திரு உருவத்தோடு தோன்றினார். "தக்கனை விட அதிபுண்ணியசாலி" என்ற பெயரும் பெற்றார். இதுதான் அங்காரகன் தோன்றிய வரலாறு என்று மச்ச புராணம் கூறுகிறது.

பொதுவாக;

உஷ்ணம், அஸ்ருமுகம், வாளம், ருதிரான்னம், நிச்த்ரிம்சம் என்னும் ஐந்து முகங்கள் செவ்வாய்க்கு உண்டு.

அங்காரகனுக்கு மேஷ வாகனம் என்று பல நூல்களும், சிங்காசனத்தில் வீற்றிருப்பார் என்று சில நூல்களும் சொல்கின்றது.

அவருக்கு சிவப்பு குடை உண்டு. கொடியில் மேஷத்தின் உருவம். திருமுடி தரித்திருப்பான். தன் பத்னி இல்லாமல் அங்காரகன் எந்த காரியத்தையும் செய்வதில்லை. முக்கோண மண்டலத்தில் வீற்றிருப்பவன். அவந்தி நாட்டிற்கு அதிபதி. பாரத்வாஜ கோத்திரம் அவனுக்கு சொந்தம்.



அங்காரகனுக்கு அதிதேவதை ப்ரித்வி. ப்ரத்யாதி தேவதை ஷேத்திர பாலகன். இவர்கள் முறையே அவனுக்கு வலப்புறமும் இடப்புறமும் இருப்பார்கள்.

லோகிதாங்கன், ரக்தாய தேஷணன், ரக்த வர்ணன் என்ற பெயர்களும் அங்காரகனுக்கு உண்டு.

வேலேந்துவதால் சக்திதரன், திருஉருவம் அழகாக இருப்பதால் "குமாரன்", எப்பொழுதும் மங்களத்தையே செய்வதால் "மங்களன்", நிறைய செல்வத்தை தருவதால் தனப்ரதன், பொற்குண்டலத்தை அணிந்து கொண்டிருப்பதால் ஹேமகுண்டலி என்று அழைக்கப்படுகிறான்.

குணஹர்த்தா, ரோகக்ருத், ரோகநாசனன், வித்யுத்பரபனி, வ்ரணகரன், காமதன், தானஹ்ருதி, சாமகானப் பிரியன், ரக்த வஸ்த்ரன், கிரக நாயகன், சர்வ தர்மாவா போதகன் போன்ற சூசகப் பெயர்களாலும் "செவ்வாய்" வலம் வந்து கொண்டிருக்கிறார்.

ரோமாபுரி நாட்டினர் கூட செவ்வாயை தங்களது போர் கடவுளாக கொண்டாடினர். பல கோயில்கள் அங்காரகனுக்கு இன்றும் ரோம் நகரில் உள்ளது.

தமிழ்நாட்டில் அங்காரகனுக்கு மூன்று பிரசித்திப் பெற்ற கோவில்கள் உண்டு.

திருச்சிறுகுடி - இது மாயாவரத்திர்க்கு பக்கத்தில் பேராளம் ரயில் நிலையத்திலிருந்து ஏழு கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது.

வைத்தீஸ்வரன் கோவில் - மாயவரத்திலிருந்து சிதம்பரம் போகும் பாதையில் இருக்கிறது.

ஆறு படை வீடுகளில் முக்கியமானதாக கருதப்படும் பழனி மலைக்கு அடிவாரத்தில் உள்ள திருவாவினன்குடி கூட முருகப்பெருமனுக்குரிய (செவ்வாய்) பரிகாரத் தலமாகும்.

ஒரே ஊரில், செவ்வாய்க்கும், புதனுக்கும் பரிகாரத்தலமாகவும், ராகு கேது தோஷங்களை அறுக்கிற புண்ணியத்தலமாகவும் இருக்குமிடம், கோடகநல்லூர்.

ஜோதிட சாஸ்த்திரத்தில் "9" என்கிற எண்ணை அங்காரகனுக்கு கொடுத்துள்ளார்கள். அந்த எண்ணை நோக்கினால் அது ஒரு முழுமை பெற்ற எண் என புரியும். அது மஹா சக்தியையும் குறிக்கும் ஒரு நிலை.

செவ்வாயை பற்றி வேதங்களில், பூமாதேவியின் கர்பத்தில் உதித்தவன், மின்னலை போல ஒளியைக் கொண்டவன், அழகானவன், சக்தி ஆயுதம் தரிப்பவன் என்று கூறப்பட்டுள்ளது.

உடல் உறுதிக்கும், மன உறுதிக்கும் செவ்வாய் தான் காரகன்.

அரசியல் தலைவர்கள், காவல் அதிகாரிகள், நாட்டுத் தளபதிகள், நீதிபதிகள், பொறியியல் வல்லுனர்கள் ஆகியோருக்கு அங்காரகன் அருள் கண்டிப்பாக இருக்கும்.

புரட்ச்சி செய்கின்ற அனைவரும் அங்காரகன் அருளை பெற்றவர்கள். கண்டிப்பு, தலைமை வகித்தல், வைராக்கியம், பகைவரை பந்தாடும் பராக்கிரமம் இவற்றையும் அருளுபவன் செவ்வாய்.

ரத்தத்திற்கு காரணன். ரத்த தொடர்பில் உள்ள சகோதரர்களுக்கும் காரகன். நமது உடலில், எலும்பினுள் ஊன். பூமிக்கு காரகன். உஷ்ணம், கோபம், ராஜ தந்திரி, எரிபொருள், தங்கம், தாமிரம், நாகன், நாகசுப்பிரமணியன், அங்காரகன்தான். ஆயுதம் தரிப்போன், அரச இனத்தோன், செந்நிறத்தோன், கடும் பார்வை உடையவன், தற்பெருமை பிரியன், பொறுமை இல்லாதவன், வேட்டைப் பிரியன், துணிச்சல்காரனும் அங்காரகன்தான். பவழம் இவனது ரத்தினம். நெருப்புக்கு சொந்தக்காரன். ஆண்மகன். தென்திசைக்கு அதிபதி.

வியாழன், சூரியன், சந்திரன் இவனது நண்பர்கள். புதன் பகைவன்.

ஜோதிடத்தில், மேஷம், விருச்சிகம் இரண்டும் சொந்த வீடுகள். கடகம் நீசவீடு. மகரம் உச்சவீடு. மிதுனம், கன்னி இவை இரண்டும் பகை வீடுகள். சிம்மம், தனுசு, மீனம்; இந்த வீடுகள் நட்பு வீடுகள்.

மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரங்களுக்கு நாயகன்.

சித்திரை மாதம் முதல் செவ்வாய் கிழமையில் வீரபத்திர சுவாமியை வழிபட்டால், அங்காரகனது அருளும் சேர்ந்து கிடைக்கும்.


வியாதிகள் குணமாவதற்கும், நிலம்,பூமி, மனை வாங்குவதற்கும் செவ்வாயின் அருள் வேண்டும்.

வியாதி குணமாக மருந்து சாப்பிடுவதை செவ்வாய் அன்று தொடங்கினால், விரைவில் குணமடையலாம்.

**"வீரத் த்வஜாய வித்மஹே விக்ன ஹஸ்தாய தீமஹி**
**தன்னோ பௌம ப்ரசோதயாத்"**

என்கிற அங்காரகனுடைய காயத்ரி மந்திரத்தை தினமும் 27 தடவை காலையிலும், மாலையிலும் சொல்லிக் கொண்டே வந்தால் அவர்களுக்கு வியாதியே வராது என்பது, தத்ரூபமான உண்மை.

## சித்தன் அருள் - நவக்ரகங்கள் - புதன்!



மிகச் சிறந்த அறிவாளிகள் அனைவரும் புதன் கிரகத்தின் கருணையால் பிறந்தவர்கள் என்று ஜோதிட கிரந்தம் சொல்கிறது.

படிப்பில் மேன்மை பெற, வாக்குவாதத்தில் வெற்றி பெற, சக்திகள் குறையாமல் இருக்க, எல்லா கலைகளிலும் உயர்வு பெற புதன் கருணை புரிவார்.

ஆரோக்கியம் நன்றாக அமைவதற்கும் புதன் ஒரு முக்கிய காரணம். எனவேதான் "பொன்னை விட புதன் உயர்வு" என்று எல்லோரும் பெருமையாகவும், உயர்வாகவும் புதனைப் பற்றி பேசுவார்கள்.

நவக்ரகங்களில் ஒன்றான புதன், சூரியனுக்கு வடகிழக்கே இருப்பவர். புதனுக்கு வலப்பக்கத்தில் விஷ்ணு இருப்பதால் விஷ்ணுவை பிரார்த்தனை செய்தாலும், புதனுக்கு போய்ச்சேரும்.

கிழமைகளில் நான்காவதாக இருப்பவர். "மந்திரம்" ஜெபித்து மேன்மை அடைய வேண்டுபவர், கவிதையில் புகழ்க் கொடியை நாட்ட ஆசைப்படுபவர், புதனை வணங்கி வந்தால் மிகவும் உயர்வான நிலைக்கு ஏற்றப்படுவார்கள்.

குருபகவானின் மனைவியான தாரை, ஒரு காலகட்டத்தில் சந்திரனுடைய இல்லத்திற்கு சென்ற பொழுது, சந்திரனைக் கண்டு மயங்கினாள். தன் கணவனான குரு பகவானை சிலகாலம் மறந்திருந்தாள்.

சூரியனுக்கும் ஒப்பான சிவபெருமானை நோக்கித் தவம் செய்யும் பொருட்டு, அப்பொழுது குருவும் த்யானத்தில் இருந்ததால் தாரையைப் பற்றி கண்டு கொள்ளவில்லை.

இந்த சந்தர்பத்தைப் பயன்படுத்தி தாரையை தன் மனைவியாகவே பாவித்து சிலகாலம் சந்திரனும் தாரையோடு இல்வாழ்க்கை வாழ்ந்து வந்தான்.

குரு பகவான் தன் த்யானம் முடிந்ததும், தாரையைத் தேடினார். தாரை, சந்திரனிடமிருந்து விடை பெற்று குருவிடம் சரண் அடைந்தாள். அச்சமயம் தாரை கருவுற்று இருந்தாள்.

குருவோடு சிலகாலம் வாழ்ந்ததும் தாரா, ஒரு குழந்தையை பெற்றெடுத்தாள். அந்த குழந்தைக்கு புதன் என்று பெயரிட்டாள். மண வாழ்க்கைக்கும் தாம்பத்திய இயல்புக்கும் மாறாக பிறந்த அந்த குழந்தை சீக்கிரமே பிறந்து விட்டது. இந்த குழந்தைக்கு உண்மையான தந்தை யார்? என்று குரு பகவானுக்கே சந்தேகம் ஏற்பட்டது.

புதன் தன்னுடைய குழந்தை தானா? என்று குரு சந்தேகப்பட்டார். அவரது சந்தேகம் நியாயமானது என்பதை அறிந்த பிரம்மதேவர்



புதனுடைய உண்மையான தந்தை சந்திரன் தான் என்று குருவுக்கு உணர்த்தினார் என்பது புராண கால வரலாறு.

பிரம்ம தேவன் புதனை அழைத்து "சூரியனுக்கு அருகில் அமர்க" என்று சொன்னதால், புதனும் அவ்வாறே சூரியனுக்கு அருகே அமர்ந்தான்.

சூரியனைப் போலவே மேருமலையை வலம் வந்தான். சிவபிரானை நோக்கித் தவம் செய்து ஒன்பது கிரகங்களில் ஒன்றாக விளங்கும் பேறு பெற்றான்.

புதன் தன் கைப்பட பிரதிஷ்டை செய்த லிங்கம் ஒன்று இப்பொழுதும் காசியில் இருக்கிறது, புதன் மறுபடியும் கடும் தவம் செய்ததால், ரிக் வேதத்தின் ஐந்தாவது காண்டத்தின் அதிகாரியாக நியமிக்கப்பட்டான் என்கிறது ஐயங்கார் பாகவதம்.

மாந்தர்களுக்கு அறிவை வழங்குவதால் புத்தி தாதா என்றும், அறிவை வளர்ப்பதால் புத்தி விவர்த்தனன் என்ற பெயரும் புதனுக்கு உண்டு.

தனப்ரதன், தயாகரன், தாரா புத்திர தானிய பசுப்ரதன் என்ற பெயர்களும் உண்டு.

அழகுடையவன் என்பதை காட்ட கஞ்ச நேத்திரன், மனோகரன், சௌம்யா மூர்த்தி ஆகிய பெயர்களும் புதனுக்கு உண்டு.

மற்ற கிரகங்கள் செய்கின்ற பீடையினால் மனம் நொந்து, புதனை பிரார்த்தனை செய்தால், புதன் வந்து காப்பாற்றுவான். இந்த திறமை புதனுக்கு மட்டும்தான் உண்டு. இதற்காக "க்ராகபீடாஹரன்" என்று சிறப்புப் பெயரும் புதனுக்கு உண்டு.

அதர்வண வேதம் 20வது காண்டம் 137 வது சூக்தம், இரண்டாவது மந்திரம் இந்திரனைப் பற்றியது. இந்த மந்திரத்தின் தேவதை புதன்.

தர்க்க சாஸ்த்திரத்தில் நிபுணன். வியாபாரத்தில் கெட்டிக்காரன் என்றெல்லாம் புதனைப் பற்றி சொல்வார்கள்.



புதன் பூசித்து வணங்கிய தலங்களுள் மிக முக்கியமானவை திருவெண்காடு. மற்றொன்று திருவாலவாய் எனப்படும் மதுரை.

திருவெண்காடு, வைத்தீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்திலிருந்தும், சீர்காழி ரயில் நிலையத்திலிருந்தும் செல்லலாம். இங்குள்ள மும்மூர்த்திகளில், முக்கியமானவர் அகோரமூர்த்தி.

சிவபெருமான் உருவம் கொண்டு, நின்ற கோலமாக இங்குதான் பார்க்க முடியும். ஞாயிற்றுக் கிழமை இரவில் அர்த்தயாமத்தில் அகோர மூர்த்திக்கு விசேஷ பூசை இன்றைக்கும் நடைபெறுகின்றது. சிவபெருமானுக்கு மூன்று கண்கள். அவை சூரிய, சந்திர, அக்னிக் கண்கள் எனப்படும். இதையொட்டி, இந்த கோயிலில் சோமதீர்த்தம், சூரிய தீர்த்தம், அக்னிதீர்த்தம், என்று மூன்று தீர்த்தங்கள் உண்டு.

புதன் இங்கு சிவபெருமானை வழிபட்டது போல வித்தையில் பலிதம் வேண்ட பக்தர்கள் திருவெண்காடு சென்று வருகின்றனர்.

இதேபோல் மதுரை சொக்கநாதர் கோயிலும் புத ஸ்தலம் ஆகும். இங்குள்ள பொற்தாமரை குளத்தில், சிவபெருமான் மூழ்கி, பின்னர் தான் லிங்கமாக மாறினார். புதன், சிவபெருமானை தரிசித்த ஸ்தலம் என்பதால், இன்னொரு சிறப்பும் இந்த கோயிலுக்கு உண்டு.

சூரியனுக்கு வடகிழக்கில், பாண வடிவான மண்டலத்தில் தங்கப் பிரதிமையாக வடக்கு முகமாக புதன் வீற்றிருப்பார்.

சூரியனிடம் பிரகாசத்தைப் பெற்று, பூமியிலுள்ள செடி கொடிகளை பச்சை நிறமாகும் தன்மை உள்ளவர்.

பச்சைப் பதார்த்தங்களில் ப்ரியமுள்ளவர். அவருக்கு பச்சை பயிற்றை நிவேதனமாக கொடுத்தால் ப்ரீதி அடைவார்.

ஜோதிடத்தில் புதனை பற்றி உயர்வாகவே கூறியிருக்கிறது. கூர்ந்து கவனித்தால், "ஞாழல் மொட்டுப் போன்ற ஒளியுடையவன். உருவத்தில், அழகில் உவமையற்றவன். கணிதம், தர்க்கம், வைத்திய அறிவு எல்லாவற்றிற்கும் மூல கர்த்தா இவனே. நாடகம், நடனம், புத்தக கலை

ஆகியவற்றின் நாயகன் புதன் தான். அறுபத்துநான்கு கலைக்கும் அதிபதி."

உடலில் ஏற்படும் நரம்பு சம்பந்தமான அனைத்துக்கும் முழுக் காரணமானவன்.

பசும்பால் நிறத்தோன், பல்சுவைப் பிரியன். வார சரீரணி, ராஜச குணமுடையவன், ரத்தினத்தில் மரகதமாக இருப்பவன். தோட்டக்கலைக்கு அதிபதி.

பஞ்ச பூதங்களில் மண் இவர். வடக்கு திசைக்குரியவன். ஜாதகத்தில் பாவக் கிரகங்களோடு சேர்ந்திருந்தால், கெடுதலையும், சுபக் கிரகங்களோடு சேர்ந்தால் சுப பலன்களையும் தருபவன்.

கிரகங்களில் அலி. ஜோதிடம் இவனுக்கு மிகவும் விசேஷமானது. ஜோதிடர்கள் சொல்வது பலிக்க வேண்டுமானால், வாக்கு சுத்தியை தருபவன். குதிரை வாகனத்தோடு வலம் வருபவன்.

மிதுனம், கன்னி ராசிக்கு அதிபதி. மீனம் நீச வீடு, கன்னி உச்ச வீடு. சூரியன், சுக்கிரன் இருவரும் இவனுக்கு நண்பர்கள். குரு, சனி, செவ்வாய் சமமானவர்கள். சந்திரன் பகைவன். உலோகத்தில் பித்தளை, நான்காவது வருணத்தோன்.

ஆயில்யம், கேட்டை, ரேவதி என்ற மூன்று நட்சத்திரங்களின் நாயகன்.

ஜோதிட சாஸ்த்திரத்தில் எண் "5"ஐ இவனுக்குரியது என்பார்கள்.

குழந்தைகள், பேச தொடங்கும் காலங்களில், பச்சை நிறக் கற்களை காதில் அணிவிக்க, மழலை விலகி, திருத்தமாக குழந்தைகளை பேச வைக்க, இவன் அருளுவான்.

சீரும் சிறப்புமாக காணப்படுபவன் என்று பெரியதாக விவரித்து எழுதப்பட்டிருக்கிறது.

**கஜ த்வஜாய வித்மஹே சுக ஹஸ்தாய தீ மஹி**



**தன்னோ புத ப்ரசோதயாத்**

என்கிற புதனின் காயத்ரி மந்திரத்தை சொல்லிவருவோருக்கு அறிவும், ஆற்றலும், ஞானமும் கிடைக்கும். சபையில் பெருமதிப்போடு வாழலாம்.

சகல சாஸ்த்திரத்தில் ஞானம் பெற சௌந்தர்யாலஹரியில் கூறியுள்ள கீழ் கண்ட ஸ்லோகத்தை பாராயணம் பண்ணலாம்.

**சவித்ரிபீர் வாசாம் சசிமணி சிலாபங்க ருசிபி**
**வசிந் யாத் யாபீஸ் த்வாம் சஹ ஜனனி ஸந்சிந்த தயதிய!**
**சகர்த்தா காவ்யாநாம் பவதி மஹதாம் பங்கி சுபகை:**
**வசோபிர் வாக்தேவி வதன கமலாமோத மதுரை.**

புதனுக்கு நவக்ரக சாந்திக்காக ராமர் அல்லது விஷ்ணு அவதார் மூர்த்திகளை பூசித்தாலும் பச்சைப் பட்டு, மரகதம் இவைகளை அணிந்தாலும், ஸ்வர்ண தானம் அல்லது பாசிப்பயறு தானம் செய்தாலும் தோஷ நிவர்த்தியாகும்.

- புதனுக்குரிய நிறம் - பச்சை
- புதனுக்குரிய கல் - மரகதம்
- புதனுக்குரிய தேவதை - விஷ்ணு
- புதனுக்குரிய அங்கம் - நரம்பு
- புதன் வாக்கிற்கு அதிபதி.

## சித்தன் அருள் - நவக்ரகங்கள் - வியாழன் (குரு)



வியாழனுக்கு "குரு" என்றும் "பிரகஸ்பதி" என்றும் சிறப்புப் பெயர்கள் உண்டு. பிரகஸ்பதி என்றாலே, அறிவில் மிகச்சிறந்தவன் என்ற அர்த்தம் தொனிக்கும். நவக்ரகங்களில் தலை சிறந்தவராக குரு கருதப்படுகிறார்.



பிரகஸ்பதி, தேவர்களுக்கு தலைவராகவும், குருவாகவும் இருப்பவர். பிரம்மாவுக்கும் பிடித்தமானவர்.

மிகச்சிறந்த தபச்வியான ஆங்கிரச முனிவருக்கும் ச்ரத்தா தேவிக்கும் புதல்வராக உதித்தவர் வியாழ பகவான்.

இவருடைய ஸ்வரூப லக்ஷணம் மிகவும் அற்புதமானது.

விந்திய மலைக்கு மேல் குருவிற்கு ஆஸ்ரமம் உண்டு. சிந்துதேச அதிபதியாக இருப்பவர். ஆங்கீரச கோத்ரம் இவருடையது.

வடக்கு ஈசான்ய திக்குகளுக்கு அதிபதி. புஷ்பராக மாலையை கொண்டிருப்பவர். தண்டம், கமண்டலம், மாலை, வரத ஹஸ்தம் உடையவர்.

எட்டு குதிரைகள் பூட்டிய தேரில் மேரு மலையை வலம் வருபவர். இவருடைய நன்மதிப்பை பெற வேண்டுமானால் இந்திரனையும், பிரம்மனையும் வழிபட்டு வரவேண்டும்.

சூரியனுக்கு வடக்கில், நீளமான சதுர மண்டலத்தில், வடக்கு முகமாக வீற்றிருப்பவர். பாஷைகளில் சமிஸ்கிரதத்தை தன்னுடையதாக கொண்டவர்.

குளுமையான வஸ்துவில் மிகப் ப்ரியம் உண்டு.

குரு என்ற சொல்லுக்கு அஞ்ஞாநத்தைப் போக்குகிறவர் என்ற பொருள் உண்டு. ஜோதிட சாஸ்த்திரத்தில் "குரு" என்றால் வியாழ பகவானையே குறிக்கும்.

எண்ணகளில் "3" என்கிற மதிப்பை இவருக்கு ஜோதிட சாஸ்த்திரம் கொடுத்துள்ளது.

குரு மூலம் யாராவது எந்த மந்திரத்தைப் பெற்று தினமும் ஜெபித்து வந்தால், அவர்களுக்கு சந்தோஷத்தையும், செல்வத்தையும் கொடுப்பவர்.



பசு மாட்டை ரட்சிக்கிற இடத்தில், குருபகவான் பிரத்தியட்சமாகக் காணப்படுவதாக சொல்லப்படுகிறது.

"பிரதிதேவோ ஜ்வலக்ரஹம்" என்று வியாழ பகவானை சொல்வார்கள். இதன் அர்த்தம், நம் மனதில் பிரதிபலிக்கின்ற தேஜோமய ஸ்வரூபத்தை கட்டுகிற கிரகம் எதுவென்று கேட்டால் அது குருபகவானுக்குரிய மண்டலம் என்று பளிச்சென்று சொல்லிவிடலாம்.

குருவிற்கு ஐந்து சகோதரர்கள் உண்டு.

பிருஹத் ஜோதிஸ், பிருஹத் பிரம்மா, பிருஹன் மனஸ், பிருஹன் மந்திர, பிருஹத்பாஸ என்பவர்கள் அவர்கள்.

பிருஹஸ்பதியாகிய குருபகவான், தாரா என்பவளை மணந்து கொண்டார். இவர்களுக்கு, சம்யூ நிஸ்யவன், விஸ்வஜித், விச்வபுக், வடபாக்னி, ஸ்விச்ட க்ருதி என்ற புத்திரர்களும், "ஸ்வாகா" என்ற பெண்ணும் உண்டு.

ஒருமுறை பரீட்சித்தின் குமாரனாகிய ஜனமே ஜெயன் ஒரு பெரிய யாகம் செய்ய விரும்பினார். அதற்கு சர்ப்ப யாகம் என்று பெயர்.

அப்படி அந்த யாகத்தை ஜனமே ஜயன் செய்தால், உலகத்தில் உள்ள பாம்புகள் எல்லாம் அழிந்து போகும் என்பதை உணர்ந்த குரு பகவான், ஜனமே ஜயனின் சர்ப்ப யாகத்தை தன அறிவாற்றலால் தடுத்து நிறுத்தினார்.

ஒரு சமயம் இந்திரன், தெய்வத்தின் திருவருளை வேண்டி தீவிரமான த்யானத்தில் ஈடுபட்ட பொழுது, தேவர்களுக்கு சங்கடம் வந்தது. அசுரர்கள் அளவுக்கு மீறி ஆட்டம் போட்டனர்.

இந்த நிலை நீடித்தால், என்ன ஆகுமோ என்று தேவர்கள் பயந்து ப்ரஹஸ்பதியான வியாழ பகவானிடம் வந்து முறையிட்டனர்.



குருபகவான், இந்திரனை, தன் சாமர்த்தியத்தால் சுயநிலைக்கு கொண்டு வந்தார். தேவர் குலம் பிழைத்தது.

குருவுக்கும் சுக்கிரனுக்கும் பல விதத்தில் கருத்து வேறுபாடு உண்டு. இருந்தாலும் குருவின் மகனாகிய அசன் என்ற விஸ்வஜித் சுகிரனிடம் மாணவனாகச் சேர்ந்து "சஞ்சீவனி" என்னும் வித்தையைத் தெரிந்து கொண்டான்.

குருபகவான் காசியில் வெகுகாலம் தங்கியிருந்து, அங்கே ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்திருக்கிறார். அதுமட்டுமல்ல, அந்த லிங்கத்தின் அருகேயே இருந்து பதினாயிரம் தேவ ஆண்டுகள் பூசித்து, தவம் செய்திருக்கிறார்.

குருபகவானின் தவத்தைக் கண்டு மகிழ்ந்து அவர் முன்னே காட்சி தந்த சிவபெருமான், "மிகப் பெரிய தவத்தைச் செய்து, உன் மனதை இந்த லிங்கத் தானத்திலே நிறுத்திய சாதனைக்காக நீ நித்திய ஜீவனாக என்றென்றும் புகழ் பெற்று விளங்குவாய். அதுமட்டுமல்ல, உன்னுடைய திறமை, அறிவாற்றல், குணங்களினால், இன்றுமுதல் நீவிர் இந்திரனுக்கும் குருவாக விளங்கக் கூடிய பாக்கியம் பெறுவீர்" என்று வரம் கொடுத்தார்.

குருவானவர் பொன் வண்ண மேனியர். நான்கு திருக்கரங்கள் உண்டு. கமண்டலம், அட்சமாலை, யோகதண்டம், அபயம் என்பவற்றை அந்தக் கரங்களில் காணலாம்.

ஆனால், விஷ்ணு தர்மோத்தரம் என்னும் நூலில் ப்ருஹஸ்பதியை இரண்டு கரம் உடையவர் என்றும் அவற்றில் புத்தகமும் அட்சமாளையும் ஏந்திக் கொண்டிருப்பார் என்று செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சாந்த மூர்த்தியாகத் திகழும் குருபகவான், சதுரமான பீடத்தில் இருப்பவர். கிழக்கு நோக்கி இருப்பவர். முடியுடையவர், பொன்னிறத்தினர், பொன்னிறச் சந்தனம் பூசுபவர், பொன்னிற மலர்,



பொன்மாலை, பொன்னாய், பொற்குடை, பொன்னிறதுவசம், கொண்டு காட்சியளிப்பவர்.

குருவின் அதிதேவதை பிரம்மன். ப்ரத்யாதி தேவதை இந்திரன் ஆகும். நீதிகாரகர், தாராபதி, கற்க பீடாபஹாரர், சௌம்யா மூர்த்தி, த்ரிலோகேசர், லோகபூஜ்யர், கிரகாதீசர் என்பவை வியாழ பகவானை குறிக்கும் சொற்களாகும்.

ஏழைக்கு இறங்குபவர், பறை, பைசாந்தி, மத்திமை, விகாரி என்ற நான்கு வகை வாக்குகளின் உருவை விளக்கிக் காட்டியவர். கருணைக்கடல், தூயவர், நீதி சாஸ்த்திர ஆசிரியர், களங்கமற்றவர் என்றெல்லாம் குருபகவானை பெருமையுடன் சொல்லப்படுவதுண்டு.

ப்ரஹஸ்பதி நீதி என்ற நூலில் "நகுஷன்" என்ற அசுரன் இந்திரன் மனைவியாகிய இந்திராணியை கவர்ந்து அவளை தன மனைவியாக்கிக் கொள்ள விரும்பினான். செய்தியை அறிந்த குருபகவான், நகுஷனை சப்தரிஷிகள் சுமக்கும் பல்லக்கில் ஏற்றி தன்னிடம் வரச் சொன்னார்.

தேவர்களின் குருவே தன்னை மதித்து, சப்தரிஷிகளை அனுப்பி, அவர்கள் தூக்கும் பல்லக்கில் வரச் சொன்னதை, கர்வம் கொண்டு திமிர் பிடித்து வந்த பொழுது, தன சக்தியால் நகுஷனை பாம்பாகா மாற்றி காட்டில் அலையை விட்டார், குருபகவான்.

குருவின் பார்வை ஒருவனுக்குக் கிடைக்குமானால், அவன் மூடனாக இருந்தாலும், அறிவாளியாக விளங்குவான்.

விஷ்ணு தர்மோத்திரத்திலுள்ள ஒரு சுலோகம் குருவிற்காக உள்ளது. இந்த ஸ்லோகத்தை தினமும் காலையில் எழுந்து, பக்தி ஸ்ரத்தையோடு சொன்னால், அவர் குருபகவானின் பேரருளைப் பெறுவார்.

**ப்ருஹஸ்பதி ஸீராசார்யோ தைவான் சுபலக்ஷண:**



**லோகத்ரய குரு ஸ்ரீமான் சர்வஞ்ஞா: சர்வகோவித:**
**ஸர்வேச: சர்வா தீபீஷ்ட சர்வஜித் சர்வ பூஜித:**
**அக்ரோதனோ முனி சிரேஷ்ட நீதிகர்த்தா குரு: பிதா**
**விஸ்வாத்மா விச்ச ஆரித்தா ச விஸ்வயோனி ரயோனிஜ:**
**பூர்வ வஸ்ஸுவப்ரபுச் சைவ பார்த்தா சிவமகா பல:**

இந்த அற்புதமான ஸ்லோகத்தை, கிருஷ்ணா பகவான், நந்த கோபன் வீட்டில் கூறியதாக வரலாறு.

குருபகவான் இந்த பூலோகத்தில் வந்து இறைவனை பூசித்த திருத்தலங்களில் மூன்று மிகவும் குறிப்பிடத்தக்கவை.

தென்குடித்திட்டை - தஞ்சாவூரிலிருந்து மாயாவரம் செல்லும் இருப்பு பாதையில் ஒன்பது கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.
திருவலிதாயம் (பாடி) - சென்னைக்குப் பக்கத்தில் 12 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

திருசெந்தூர் - குருபகவான் மிகவும் விரும்பி பூசித்த முருகப் பெருமானின் அறுபடைவீடுகளில் ஒன்று. திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிறது.

**வ்ருஷப த்வஜாய வித்மஹே க்ருணி ஹஸ்தாய தீமஹி**
**தந்நோ குரு ப்ரசோதயாத்:**

இந்த குரு காயத்ரியை தினமும் பாராயணம் செய்கிறவர்களுக்கு எந்த குறையும் வராது, இருக்கின்ற குறைகளும் நீங்கிவிடும்.

தெய்வீக அறிவுக்கும், வேதாந்த ஞானத்திற்கும், முக்கரணங்களின் தூய்மைக்கும் பொருளாக உள்ளவர்.

மேதைகள், ஞானிகள், பக்தர்கள் இவர்களுக்கு மூலகர்த்தா.

அந்தணர்களுக்கும், பசுக்களுக்கும் ஆதிமூலவர். உடல் வலிமை, உள வலிமையைத் தருபவரும் இவரே.தலைவணங்கா தலைமைப்



பதவியையும் தருபவர். மாபெரும் சாதனைகளை படைப்பவரும் இவர்தான்.

நாட்டை ஆளவைப்பதும், நவீன யுக்திகளை கொடுப்பதும் இவர்தான். மென்மைக்கும், அற்புதமான குணத்திற்கும் சொந்தக்காரர்.

விவேகத்தை அளிப்பவர்,மந்தகாச முகத்தி உடையவர். இனிப்பில் பிரியர். மஞ்சள் நிறத்தவர். உடலில் சதையாக இருப்பவர். வாதம், பித்தம், கபம் இவற்றில் கபம் இவருடைய கையில் உள்ளது.

புஷ்பராக கல்லுக்குரியவர். கஜானாவை விளங்க வைப்பவர். ஆண் கிரகம் இவர். பஞ்ச பூதங்களில் ஆகாயம் இவர்.

வடகிழக்கு இவரது திசை. தனுசு, மீனம் ஆகிய ராசிகளுக்கு அதிபதி. கடகம் உச்ச வீடு, மகரம் நீச வீடு.

புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆக்கிய மூன்று நட்சத்திரங்களுக்கு அதிபதி. இவர் தசை நடக்கும் பொழுது நன்மைகளே நடக்கும்.

பகலில் இவருக்கு பலம் அதிகம். இவரது பார்வை பட்டால் அத்தனையும் நன்மையாகும்.

**தேவானாஞ்ச ரிஷீணாஞ்ச குரும் காஞ்சன சந்நிபம்!**
**பக்திபூதம் த்ரிலோ கேசம் தம் நமாமி ப்ருஹஸ்பதிம்!**

என்பது இவர் துதி.

சகலவிதமான சம்பத்தும், ஐஸ்வர்யங்களும் நமக்கு வேண்டுமென்றால் சௌந்தர்யலஹரியிலுள்ள கீழ் கண்ட ஸ்லோகத்தை தினமும் பாராயணம் செய்யலாம்.

**அவித்யானா மந்தஸ்திமிர மிஹிர த்வீபநகரீ**
**ஜடானாம் சைதன்ய ஸ்தபக மகரந்த ஸ்ருதி ஜரி**
**தரித்ராணாம் சிந்தாமணி குண நிகா ஜந்ம ஜலதௌ**
**நிமக்நா நாம் தம்ஷ்ட்ரா முரரிபு வராஹஸ்ய பவதீ!**



## சித்தன் அருள் - நவக்ரகங்கள் – சுக்ரன்

ப்ருகு மகரிஷிக்கும், புலோமா என்பவளுக்கும் பிறந்தவர் சுக்கிரன். சகல வித்தைகளிலும் கரை கண்டவர். சுக்ர நீதி என்ற ராஜதந்திர நூலை எழுதியவர்.

சுக்ரன் அழகு தெய்வம் என்று சொல்லப்படுபவர். இவர் அசுரர்களுக்கு தலைவனாக விளங்கினார்.

இளம் வயதில் குபேரனது உடலில் புகுந்து அவனது பொருள்களையெல்லாம் கவர்ந்தவர். குபேரன் சிவனிடம் முறையிட்டார். சிவன் சூலத்தை எடுத்து சுக்கிரன நோக்கி பிரயோகித்தார். இதைக்கண்டு சுக்கிரன் சூலத்தில் நுனியில் தங்கி, உயிர் பிழைத்தார்.

திருமால், எப்பொழுதும் தேவர்களுக்கு உதவி செய்வதைக் கண்டு அசுரர்கள் வருந்தினார்கள். அவர்களைச் சமாதானப்படுத்தி, கொஞ்சம் பொறுங்கள், நான் சிவபெருமானிடம் உபதேசம் பெற்று வந்து, உங்களைக் காப்பாற்றுகிறேன். அதுவரை தேவர்களுடன் சண்டைக்குப் போகாதீர்கள்" என்று வாக்குறுதி கொடுத்தார்.

சுக்கிரன், நேராக காசி நகரம் சென்று, அங்கே லிங்கம் ஒன்றை நிறுவி பூசித்தான். இறைவன் காட்சியைக் கொடுக்கவில்லை. சுக்கிரன் மனவருத்தமடைந்து மீண்டும் புலன்களை அடக்கித் தவம் புரியத் தொடங்கினான்.

ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்வதை அறிந்த சிவபெருமான், சுக்கிரன் முன்பு தோன்றி, "உன் தவம் மிகவும் வலிமைமிக்கது. அதனால் உள்ளம் மகிழ்ந்தோம்" என்று சொல்லி இதுவரை யாருக்கும் "கிடைக்காத "மிருத சஞ்சீவினி" என்ற மந்திரத்தை உபதேசம் செய்தார். மிருத சஞ்சீவனி மந்திரத்தால், இறந்தவர்கள் அத்தனை பேர்களும் மீண்டும் உயிர் பெற்று எழுவார்கள்.

ஒருமுறை......



அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் ஒரு பெரிய போட்டி ஏற்ப்பட்டது.

மூன்று உலகங்களையும் தாங்கள்தான் ஆட்சி புரிய வேண்டும் என்று தேவர்களும், அசுரர்களும் விரும்பினார்கள். இதனால் பகை வளர்ந்தது.

தேவர்கள், தங்கள் குல குருவான பிரகஸ்பதியைக் கொண்டு, வெற்றி பெறுவதற்காக யாகங்கள் செய்யத் தொடங்கினார்கள்.

அசுரர்கள், சுக்கிரனை தங்கள் குருவாக ஏற்று தங்களை வலுப்படுத்திக் கொண்டார்கள். இதனால் அமரர்களாகிய தேவர்கள், சுக்கிரன் மீது கோபம் கொண்டார்கள்.

திடீரென்று ஒருநாள்,

அவர்கள் இவர்களுக்கும் போர் மூண்டது. அசுரர்கள் நிறைய பேர்கள் போரில் மாண்டனர். சுக்கிரனோ, தான் பெற்ற மிருத சஞ்சீவனி மந்திரத்தால், இறந்த அசுரர்களை உயிர்பித்துக் கொண்டிருந்தார்.

தேவர்கள், இதைக் கண்டு கலங்கிப் போனார்கள்.

தேவர்களுக்கு குருவாக இருக்கும் ப்ரகஸ்பதிக்கு, மிருத சஞ்சீவனி மந்திரம் தெரியாது. அதனால் தேவர்கள் வீழ்ச்சியடைந்து கொண்டே இருந்தனர்.

பிரகஸ்பதியின் தபஸ், சுக்கிரனுக்கு முன்பு ஒன்றும் பலன் தரவில்லை. இதனால், தேவர்கள், போரை இடையில் நிறுத்திவிட்டு, ஓடினார்கள்.

இதற்கிடையில்,

"அந்தகாசுரன்" என்பவன், தனியாக வந்து, தேவர்களோடு சண்டையிட்டான். தேவர்கள், அவனை விரட்டி அடித்தனர். உயிருக்கு பயந்து, அந்தகாசுரன், சுக்கிரனிடம் வந்து "பெருமானே, தாங்கள் வந்து என்னைக் காப்பாற்றுங்கள், அமரர்கள், வெகுவேகமாக நம் அசுர குலத்தை நசுக்க ஓடி வருகிறார்கள்" என்று அலறினான்.



அந்தகாசுரன் பேச்சை நம்பி, சுக்கிரன் கடும் கோபம் கொண்டு, அசுரர்களை அழைத்து, "தேவர்களோடு போர் புரியுங்கள்! உங்களை காப்பாற்றுவது என் பொறுப்பு" என்று தூண்டிவிட்டார். இந்தமுறை நடந்த கடுமையான போரில் தேவர்கள் தோற்றுக்கொண்டிருக்க, கொல்லப்பட்ட அசுரர்கள், உயிர் பிழைத்துக் கொண்டே இருந்தார்கள்.

நிலைமையை ஞானக்கண்ணால் அறிந்தார், நந்திதேவர். சிவபெருமானிடம் சென்றார். "எம்பெருமானே தேவரீர் தாங்கள் அருளிய மந்திரத்தால், சுக்கிரன் இறந்துபோன அசுரர்களை உயிர்பித்துக் கொண்டிருக்கிறான். தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் சண்டை நடந்து கொண்டே இருக்கிறது. தேவர்களை காக்க வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தார்.

சிவபெருமான், நந்தி தேவரின் வேண்டுகோளை ஏற்றார். சுக்கிரனை தன்னிடம் வரச் சொன்னார். சுக்கிரன் வந்ததும் அவனை விழுங்கி, தன் திரு வயிற்றிலே இருக்கும்படி செய்தார்.

இதற்குப் பிறகு, அசுரபலம் குறைந்தது. தேவர்கள் வெற்றி பெற்றனர். ஆனால் சிவபெருமான் வயிற்றில் இருந்த சுக்கிரன், ஆயிரம் ஆண்டு யோகத்திலே இருந்தான். சுக்கிரனது யோக நிலை சிவபெருமானை மனமிரங்கச் செய்தது.

சுக்கிரனை தன் வயிற்றிலிருந்து வெளியே கொண்டு வந்தார். இதனால் சுக்கிரனுக்கு, சிவகுமாரன் என்ற பெயரும் விளங்கிற்று.

சிவபெருமான் வயிற்றிலிருந்து வெளியே வந்த சுக்கிரனைக் கண்டு அசுரர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அதே சமயம், தேவர்களுக்கு வயிற்றைக் கலக்கியது.

பிரகஸ்பதியும், இதுபற்றி சிலகாலம் சிந்தனை பண்ணினார். பின் ஒருநாள், பிரகஸ்பதி தன் மகன் "கசனை" அணுகி "தேவர்குலம் செழிக்க வேண்டுமானால் நீ ஒரு உபாயம் செய்ய வேண்டும். நீ யார் என்பது தெரியாமல் சுக்கிரனிடம் சென்று, அவனுடைய திருமகளாகிய தேவயானியின் உள்ளம் உவக்கும் வண்ணம் நடந்துகொள். சுக்கிரன்



மனமிரங்கி, மிருத சஞ்சீவனி மந்திரத்தை உனக்கு அருள்வான்" என்று ஆசையைத் தூண்டி விட்டார்.

கசன், சுக்கிரனிடம் மாணவனாக சேர்ந்தான். நாளடைவில் தேவயானியின் உள்ளத்தையும் கவர்ந்தான். அவர்கள் இன்பமுற்று இருக்கும் பொழுது, அசுரர்களுக்கு "கசன்" யார் என்று தெரிந்துவிட்டது.

சுக்கிரனுக்கு தெரியாமலேயே கசனை அசுரர்கள் கொன்றனர்.

செய்தி அறிந்த சுக்கிரன் தன் மகள் தேவயானிக்காக இறந்து போன கசனை, மந்திரத்தால் உயிர் எழுப்பினான்.

சுக்கிரன், இப்படி இருமுறை, கசனை உயிர்ப்பித்தான். மூன்றாவது முறையாகவும் அசுரர்கள் கசனை கொல்ல முயற்சித்தார்கள். சுக்ராச்சாரியாருக்கு மதுவருந்தும் பழக்கம் உண்டு.

இதை வைத்து அசுரர்கள் ஒரு திட்டம் தீட்டி கசனைக் கொன்று, கொளுத்தி அவனது சாம்பலை மதுவோடு கலந்து சுக்கிராச்சாரியாருக்குக் கொடுத்தார்கள்.

சுக்ராச்சாரியார் அதைக் குடித்துவிட்டார்.

கசனைக் காணாமல் தேவயானி தன் தந்தையிடம் கலங்கவே, சுக்ராச்சாரியார் மந்திரத்தைச் சொன்னார்.

இதைக் கேட்டதும் அவர் வயிற்றுக்கு உள்ளிருந்த கசன் உயிர் பெற்றான். கசனை தன் வயிற்றிலிருந்து வெளியே கொண்டு வர வேண்டுமென்றால், தான் மாளவேண்டும் என்பதை அறிந்த சுக்கிரன் வயிற்றுக்குள் இருந்த கசனுக்கு, அங்கிருந்தபடியே கற்றுக் கொள்ளும்படி சஞ்சீவனி மந்திரத்தை உபதேசித்தார்.

அதை பெற்ற கசன், சுக்கிரனது வயிற்றை பிளந்து கொண்டு வெளியே வந்தான். சுக்கிரன் இறந்து போனார்.



வெளியே வந்த கசன், தான் பெற்ற மந்திர பலத்தால் சுக்கிரனை எழுப்பினான். சுக்கிரனும் உயிர் பிழைத்தார்.

இதற்குப் பிறகு கசன், தன தந்தை பிரகஸ்பதியை அடைந்தான். "மிருத சஞ்சீவனி" மந்திரத்தைக் கற்று வந்த தன் மகனை ஆரத்தழுவி வரவேற்றார் குரு பகவான். கசனது முயற்சியால் தேவர் குலம், மரணத்திலிருந்து தப்பியது....

மகாபாரத கதைகளும், அபிதான சிந்தாமணியும்.

வாமன அவதாரத்தின் போது, குள்ள பிராமணனாக வந்த திருமாலுக்கு மூன்றடி மண் தானம் செய்யாதே என்று சுக்கிரன் தடுத்தார். மகாபலி இதை அலட்ச்சியம் செய்து கேட்காது போகவே, வண்டு ரூபம் எடுத்து, தானம் செய்ய விழும் தண்ணீர் துவாரத்தை அடைத்தார். வாமனர் தர்ப்பையால் கிண்டியின் துவாரத்தை குத்தவே, சுக்கிரனுக்கு கண் போய்விட்டது. மீண்டும் தவமிருந்து சிவபெருமான் மூலம் இழந்த கண்ணைப் பெற்றார்.

ஜோதிடத்தில் சுக்கிரனை பற்றி கூறும் பொழுது, அனைத்து இன்பங்களுக்கும் வித்தானவன், அழகன், மணம், மங்கை, அன்பு, ஆசை எல்லாமே இவனே, என்கிறது.

அதிர்ஷ்டம் என்பதும், காமனுக்கு அரண் என்பதும் இவனே.

வியாபாரத் தேவதை. வித்தைகளில் உலகத்தின் பார்வையை கவர்கின்றவன். காதல், கூடல், பதவி, வசதியான வாழ்க்கை, சௌபாக்கியம் தருவதும் சுக்கிரன்தான். உடல் வீரியம், புளிப்பு சுவை பிரியன். ராஜஸ குணத்தோன், வெள்ளிக்கு அதிபதி. பஞ்ச பூதங்களில் நீர் இவன். அந்தண குலத்தோன். வைரம் இவனுக்குரியது. பெண் குணம் கொண்டவன்.

- ரிஷபம், துலாம் சொந்த வீடு.
- கன்னி நீச வீடு
- மீனம் உச்ச வீடு



- பரணி, பூரம், பூராடம் என்ற நட்சத்திரம் இவனுக்கு சொந்தம்.
- சனி, புதன் நண்பர்கள்
- குரு, செவ்வாய் சமமானவர்கள்
- மற்றவர்கள் பகைவர்கள்

ஜாதகத்தில் களத்திரகாரனாக இருந்து காம சுகத்தை தருபவன்.

சுக்கிரனின் யோக பலம் ஒருவருக்கு எப்பொழுது வந்தாலும், சந்தோஷத்தையும், சௌபாக்கியத்தையும், தானத்தையும், தனத்தையும் அள்ளிக் கொடுக்கும்.

சுக்கிரனுக்கு நான்கு குமாரர்கள். தேவயானி, கரசை என்ற பெண்கள். அசுரர்களின் தலைவராக இன்றைக்கும் இருந்து வருகிறார்.

சுக்கிரனுக்கு கரங்கள், நான்கு. இவரது தேரை, பத்து குதிரைகள் இழுப்பதாகவும் சொல்லப்படுகிறது.

பஞ்ச கோணமான பீடத்தை உடையவர். வெண்சந்தானம், வெண்மலர், வெண்மணிமாலை, வெள்ளாடை, வெண்குடை, வெண்ணிறக்கொடி உடையவர். பத்மாசனம் கொண்டு கிழக்கு நோக்கி அமர்ந்திருப்பவன்.

சுக்கிரனுடைய மந்திரத்திற்கு உரிய முனிவர் பாரத்துவாஜர். சந்தம். த்ரிஷ்டும் சுக்கிரனுக்கு அதிதேவதை. இந்த்ராணி ப்ரத்யாதி தேவதை.

சுக்கிரன் அக்னி திக்குக்கு அதிபதி. கிழக்கு திசைக்கும் தலைவன். கருட வாகனமும் உண்டு.

களத்திர காரகன். மழை பெய்ய உதவுபவன். இனிப்பு சுவை சுக்கிரனுக்கு உகந்தது.

அசுர குருவாக விளங்கும் சுக்கிராச்சாரியார் தமிழ்நாட்டில் பூசித்த ஸ்தலங்கள் உண்டு. திருநாவலூர், ஸ்ரீரங்கம்.

திருநாவலூர், பண்ருட்டி ரயில் நிலையத்திலிருந்து பதினைந்து கல் தொலைவில் உள்ளது. ஸ்ரீரங்கம் வைணவத்தலம் திருச்சியில்

இருக்கிறது. இந்தக் கோவிலில் ஏழு மதில்கள் உண்டு. அந்த ஏழு மதில்களும் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மஹர்லோகம், ஜநலோகம், தபோலோகம், சத்யலோகம் என்று பெயர் கொண்டு வழங்கப் படுகிறது.

மற்றொரு சிறப்பு, இதில் ஒன்பது புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. சந்திர புஷ்கரணி, நாவல் தீர்த்தம், வில்வ தீர்த்தம், அசுர தீர்த்தம், புன்னை தீர்த்தம், மகிழ தீர்த்தம், பரசு தீர்த்தம், கடம்ப தீர்த்தம், மாதீர்த்தம் என்பவையே அது.

**"அஸ்வ த்வஜாய வித்மஹே தனுர் ஹஸ்தாய தீமஹி**
**தந்நோ சுக்ர ப்ரசோதயாத்"**

என்பது சுக்கிரனின் காயத்திரி மந்திரம்.

ஜோதிட சாஸ்த்திரத்தில் எண் "6"ஐ சுக்கிரனுக்கு கொடுத்துள்ளார்கள்.

திருமணம் ஆகவேண்டும் என்பவர்கள், சௌபாக்கியம் , குழந்தை பாக்கியம் ஏற்படவில்லையே என்று கலங்குபவர்கள் சௌந்தர்ய லஹரியில் உள்ள கீழ் கண்ட ஸ்லோகத்தை தினமும் சொல்லி வரலாம்.

**"சதுர்ப்பி ஸ்ரீ கண்ட்டை சிவயுவதிபி பஞ்சப்ரபி:**
**ப்ரபிந்தாபி: சம்போர் நவபிரபி: மூலப்ரக்ருதிபீ:**
**த்ரயஸ் சத்வாரிம் சத் வசுதல காலாஸ்ர: த்ரிவலய**
**திரிரேகாபி: ஸார்த்தம் தவ ஸரண கோணா பரிணதா!**

வெள்ளிக்கிழமை அன்று, இந்த ஸ்லோகத்தை எத்தனை தடவை சொல்கிறோமோ, அத்தனைக்கு அத்தனை நற்பலன் அடையலாம்.

## சித்தன் அருள் - நவக்ரகங்கள் – சனீஸ்வரன்



கிரகங்களில் ஈஸ்வரன் என்ற சிறப்புப் பெயருக்குக் காரணமாகி நிற்பவர் "சனி"தான். பொதுவாக சனி என்றாலே, எல்லோரையும் ஆட்டி வைப்பவர் என்று பொருள். ஆனால் தன்னை யார் ஸ்ரத்தையோடு வழிபடுகிறார்களோ அவருக்கு அல்லது அவர்களுக்கு, கருணையை அள்ளித் தரும் வள்ளல் இவர்தான்.

சூரியன் சஞ்சிகை என்பவளை மணந்து வாழ்ந்து கொண்டு வந்தான். அவர்களுக்கு மநு, யமன், யமுனை என்று மூன்று குழந்தைகள் பிறந்து வளர்ந்து வந்தன! ஒரு சமயம் சஞ்சிகைக்கு, சூரியனது வெப்பம் தாங்க முடியவில்லை. அதோடு அவளுக்கும் தவம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. இதற்காக சஞ்சிகை ஒரு ஏற்பாட்டை செய்தாள்.



சூரியனுக்கு தெரியாமல்தான் அவரை விட்டுவிலகவேண்டும் என்பதற்காக, தன் நிழலையே ஒரு பெண்ணாகச் செய்து, அவளை அங்கேயே விட்டுவிட்டு, தந்தையிடம் சென்று விட்டாள். அவளுடைய நிழலில் தோன்றிய பெண்ணிற்கு "சாயாதேவி" என்று பெயர் அமைந்தது.

சஞ்சிகையின் வேண்டுகோளை ஏற்ற சாயாதேவி தான் வேறு ஒருத்தி என்பதைத் தெரிவிக்காமலேயே சூரியனோடு வாழ்ந்து வந்தாள். அவளுக்கு சாவர்ணீ என்ற மனுவும், சனி பகவானும், பத்திரை என்ற பெண்ணும் பிறந்தனர்.

இந்தக் குழந்தைகள் பிறந்ததும், சாயாதேவிக்கும், சஞ்சிகையின் குழந்தைகள் மீது பாசமே ஏற்படவில்லை.

யமனுக்கு கோபம் வந்தது. தன்னை நேசிக்காத சாயாதேவியை உதைக்கப் போனான். இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த சாயாதேவி, உன் கால் முறியட்டும் என்று சாபமிட்டாள். யமனுக்கு கால் ஒடிந்தது.

இந்த செய்தி பின்னர் சூரியனுக்குத் தெரிய வந்தது. ஏன் இப்படி வித்தியாசமாக நடந்து கொள்கிறாள், என்று விசாரித்த பொழுது, சாயாதேவி யார் என்பது தெரிந்தது. பிறகு சூரியன் சாயாதேவியையும் தன் மனைவியாக ஏற்றுக் கொண்டான். தந்தையின் வீட்டில் தவம் புரிந்து கொண்டிருந்த சஞ்சிகையை அழைத்து வந்து இல்லறம் நடத்தி வந்தான். யமனது காலும் குணமாயிற்று.

சூரியனுக்கும், சாயாதேவிக்கும் புதல்வனாக தோன்றியவர் சனி பகவான். இவர் பூலோகத்திற்கு வந்து காசிக்கு சென்று தன் பெயரால் ஒரு லிங்கத்தை நிறுவி, பூசை செய்து வந்ததினால் நவக்ரகங்களில் ஒருவராக சிறப்புப் பதவியை அடைந்தார் என்று சனி பகவான் வரலாறு கூறுகிறது.

சனிபகவான், ஒரு சமயம் தன் பெரிய தாயாரான சஞ்சிகையை கேவலமாக பேசினார். இதைக் கேட்ட யமன், கோபப்பட்டு சனி பகவானின் காலை உடைத்தார். சனி பகவான் ஒரு கால் ஊனமானார்.



சனி பகவான் ஏன் கெடுதலை தருகிறார் என்பதற்கு ஒரு கதை உண்டு. சனி பகவானுக்கு தவம் செய்வதில்தான் ஈடுபாடு. இல்லறத்தில் நாட்டமே இல்லை. இதை அறியாமல் அவருக்கு சித்திரதா என்பவர் தன் மகளை சனிபகவானுக்கு மணம் செய்து வைத்தார்.

கல்யாணமான பின்பும் கூட தன் மனைவியை நேசிக்காமல் தவத்திலே ஈடுபட்டார் சனீஸ்வரன். ஒரு பெண்ணை எதற்காகத் திருமணம் செய்து கொண்டோம் என்பதை மறந்த சனிபகவானை எண்ணி எண்ணி விரக வேதனையால், அவன் மனைவி சபித்துவிட்டாள்.

"ஒரு பெண்ணின் ஆசையைப் புரிந்து கொள்ளாத நீங்கள், கணவர் என்ற முறையில் வாழத் தெரியாத நீங்கள், தவ வலிமையின் ஆனந்தம் அடையாமல் போகட்டும் என்று சபித்த வார்த்தைகளால், சனிபகவான் நொந்து போனார்.

அன்று முதல் அவரது பார்வை வக்கிரமாக அமைந்துவிட்டது. மாற்றவே முடியவில்லை என்பது ஐதீகம்.

ஆகமங்களில், சனியினுடைய உருவம், உடை ஆகியவைப் பற்றிய செய்திகள் வருகின்றன. கரிய நிறமுடையவன். கரிய ஆடையை அணிபவன். ஒரு கால் முடவன். இருகரம் உடையவன். வலக்கரத்திலே தண்டமும், இடக்கரத்தில் வரதக் குறிப்பும் உடையவன். பத்மபீடத்தில் வீற்றிருப்பவன். அட்ச மாலையை கொண்டு எட்டு குதிரைகள் பூட்டிய இரும்பு ரதத்தில் பவனி வருபவன்.

சனிபகவானுக்கு இருவகை மந்திரங்கள் உரியது. ஒன்று வேதம். இதற்கு ரிஷியாக இருப்பவர் இளிமிளி. அந்த மந்திரத்தின் பெயர் உஷ்ணிக் என்ற சந்தத்தில் அமைந்தது. மற்றொரு மந்திரம் காயத்ரி சந்தசைக் கொண்டது. அதற்கு ரிஷி - மித்ரரிஷி. நவக்ரக ஆராதனம் என்னும் நூலில் சனிபகவான் வில்லைப்போல ஆசனத்தில் வீற்றிருப்பான். அழகு வாகனம் உடையவன். மேற்கு நோக்கி இருப்பான். நீல மேனி உடையவன். முடிதரித்தவன். சூலம், வில், வரதம், அபயம் கொண்டவன், மெல்ல நடப்பவன். கருஞ்சந்தனம் பூசுபவன். கருமலர், நீலமலர்

மாலையை விரும்புகிறவன். கரு நிறக்குடை, கொடி கொண்டவன் என்று சனியைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது.

சனிக்கு, அதிதேவதை யமன். வலப்பக்கத்தில் இவனை ஆவாகனம் செய்ய வேண்டும். இடப்பக்கத்தில் ப்ரத்யாதி தேவதையாகிய பிரஜாபதி இருப்பார்.

சனியைப் போல் கொடுப்பவருமில்லை, கெடுப்பவருமில்லை.

தமிழ்நாட்டில்தான் சனிபகவானுக்கு காக்கையை வாகனமாக சொல்வது வழக்கம். வடநாட்டில் உள்ள த்யான சுலோகங்களில் சனி பகவானுக்கு கழுகை வாகனமாக குறிக்கின்றனர்.

சனி, மந்தன், பிணிமுகன், முதுமகன், முடவன், காரி என்ற வேறு பெயர்களும் உண்டு. தாமத குணம் உண்டு. பிரியமான உலோகம் இரும்பு. மணி நீளம், தானியம் எள், மலர் கரும்குவளை, சுவை கசப்பு.

காச்யப கோத்திரத்தை சேர்ந்தவர்.

சனியை வழிபட்டால், நீண்ட ஆயுளுடன் வாழலாம். சனி பகவானுக்கு ஜேஷ்டா, நீலா, மன்தா என்று மூன்று மனைவிகள் உண்டு. இவர்களில் சனி பகவானுக்கு மிகவும் பிடித்த மனைவி, நீலா.

சனியின் குமாரன், குளிகன். குளிகை காலத்தில் எதைச் செய்தாலும், நன்கு பெருகும். ஆனால் இறந்தவர்கள் உடலை மாத்திரம் எடுக்கக்கூடாது என்பது சாஸ்த்திரம்.

எல்லா கிரகங்களுக்கும் இல்லாத "ஈஸ்வரன்" என்ற அடைமொழி சனிக்கு மட்டுமே உண்டு. ஒரு சமயம் சிவபெருமானையே சனி பிடிக்கும் முறை வந்தது. சனியை தூரத்தில் கண்டதும் "இவன் கையில் பிடிபடக் கூடாது, நிஷ்டையில் அமரப் போகிறேன்" என்று பார்வதி தேவியிடம் கூறிவிட்டு, ஒரு குகையில் சென்று அதன் வாயிலை நன்றாக மூடிக் கொண்டு நிஷ்டையில் அமர்ந்தார் சிவபெருமான்.

ஏழரை ஆண்டுகள் கழிந்தன.

சிவபெருமான் தன் நிஷ்டையைக் கலைத்துவிட்டு எழுந்தார். சனி பகவானிடமிருந்து தான் தப்பி விட்டதை எண்ணி மகிழ்ந்தார். குகையின் வாயிற் கதவை திறந்தார். வெளியே வந்தவர், வாசலில் அமர்ந்திருந்த சனிபகவானைக் கண்டதும் வியப்படைந்தார்.

"வணக்கம். என் வேலை முடிந்துவிட்டது. போய் வருகிறேன்" என்று கூறி அங்கிருந்து சனி பகவான் கிளம்ப முயன்றார்.

"எப்படி உன் கடமை முடிந்தது? நான் தான் உன் பிடியில் சிக்கவில்லையே?" என்றார் சிவபெருமான்.

"தாங்கள் பார்வதி தேவியை விட்டுப் பிரிந்து இந்த ஏழரை ஆண்டுகள் குகையிலே அடைந்து கிடக்கும்படி செய்தவனே அடியேன்தான். அதனால்தான் சொன்னேன், என் கடமை முடிந்து விட்டது" என்றார் சனிபகவான்.

சிவபெருமான் உண்மை இதுதான் என்பதை உணர்ந்து "என்னையே நீ பிடித்ததால் இனிமேல் உனக்கு "சனீஸ்வரன்" என்ற பெயர் வழங்கட்டும்" என்று அருளினார். அன்று முதல் சனிபகவானுக்கு "சனீஸ்வரன்" என்று பெயர் வழங்கலாயிற்று.

**"காக த்வஜாய வித்மஹே, கட்க ஹஸ்தாய தீமஹி**
**தந்நோ மந்த: ப்ரசோதயாத்"**

என்கிற சனிபகவான் காயத்ரி மந்திரத்தை தினசரி பாராயணமாகக் கொள்ளலாம். சனிபகவான் அருள் நன்றாகவே கிட்டும்.

சனிபகவான் தானே விருப்பப்பட்டு பூசை செய்த ஸ்தலங்கள் பல இந்தப் பூமியில் உண்டு. அவற்றில் என்றென்றும் நிலைத்து நிற்பது "திருநள்ளாறு".

ஏழரை சனி என்பது, அவரவர் நட்சத்திரத்திற்கு சனிபகவான் 12ம் இடம், ஜென்மம், இரண்டாம் இடம் வரும் பொழுது ஏற்படுவது. உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற சந்தேகம், இடம்விட்டு இடம் மாறுதல்,

குடும்பத்தை விட்டுப் பிரிதல், உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுதல், பண நஷ்டம், தொழில் நஷ்டம், இவைகள் ஏற்படும்.

சனீஸ்வரர் இருக்கும் கோயில்களில் முதன்மை பெற்றது, திருநள்ளாறு. இது காரைக்கால் ரயில் மார்க்கத்திலிருந்து தெற்கே ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. ஆதிபுரி, தர்பாரண்யம், நகவிடங்கபுரம், நளேச்வரம் என்ற பெயர்களும் இந்த ஸ்தலத்திற்கு உண்டு.

நளமகாராஜா ஏழரை சனியில் பீடிக்கப்பட்டு துன்புற்றபோது, இங்கு வந்து நளதீர்த்தத்தில் நீராடி சனிபகவானை பூசித்ததும், சனிபகவான் அவரைவிட்டு விலகியதாகச் சொல்லப்படுகிறது. இந்த கோயிலில் உள்ள நளதீர்த்தம், பிரம்மதீர்த்தம், சரஸ்வதிதீர்த்தம், அகஸ்தியர்தீர்த்தம் ஆகியவை விசேஷமான தீர்த்தங்கள்.

திருநள்ளாரில் உள்ள நளதீர்த்தக் கரையில் உள்ள ஸ்ரீ விநாயகரை வலம் வந்து குளத்தின் நடுவில் உள்ள நளமாகாராஜா குடும்பத்தை மரியாதையுடன் வணங்க வேண்டும். பிறகு குளத்தில் இறங்கி முதலில் தலையில் கொஞ்சம் ஜலம் எடுத்து ப்ரோக்ஷணம் செய்து கொள்ள வேண்டும். பிறகு தகுந்த நபர்களை கொண்டு சங்கல்பம் செய்து கொண்டு, ஸ்நானம் செய்ய வேண்டும். பிறகு கோயிலுக்குள் சென்று சனீஸ்வரனை வணங்கி பிரார்த்தனை செய்து கொள்வது நலம்.

ஜோதிட சாஸ்த்திரம், சனிபகவானை பற்றி கூறும் பொழுது, கீழ்நிலையைச் சேர்ந்தவர்கள் தங்க இடமாகக் கொண்டிருப்பான் என்கிறது.

அலியாக இருப்பவன். பஞ்ச பூதங்களில் காற்றாக வருபவன். மேற்கு திசைக்கு உரியவன்.

- துலாம் உச்ச வீடு
- மகர கும்பங்கள் சொந்த வீடு.
- பூசம், அனுஷம், உத்தரட்டாதி என்ற மூன்று நட்சத்திரங்களுக்கு உரியவன்.
- புதன், சுக்கிரன் நண்பர்கள்.



- செவ்வாய், சந்திரன், சூரியன் - பகைவர்கள்.

இவனுக்கு ஒரு கால் கிடையாது. அதனால், மந்த நடை நடப்பான். அற்புதமான பராக்கிரம சாலியான இவன், சிவபெருமானது கருணைக்கு எதையும் செய்யக் கூடியவன்.

நீண்ட கால வாழ்வுக்கும், மரணத்திற்கும் காரணமானவன்.

வறுமை, கஷ்டம், நோய், அவமரியாதை இதற்கு மூல காரணமாக இருப்பவன். சனி பலமாக இருந்தால் தியாகிகளாகவும், தேசத் தலைவர்களாகவும் மாற முடியும்.உலக அறிவில், வெளி நாட்டு மொழிகளில் பாண்டித்தியம் அடைய உதவுவதும் சனி.

இரும்புக்கு காரகன். நல்லெண்ணெய் நாயகன். கருப்பு தானியங்களின் பிரதிநிதி. இயந்திரங்களை கற்க, ஓட்ட திறனளிப்பவன். விவசாயம் செழிக்க சனி கருணை காட்ட வேண்டும்.

உடலில் நரம்பு இவன்.

கொடிய மனம் உடையவன். கல் நெஞ்சன்.

வாதம், பித்தம், கபம் மூன்றில், வாதமாக இருப்பவன். தாமச குணத்தோன், ரத்தினங்களில் நீலமாக இருப்பவன். காடு, மலைகளுக்கு உரியவன்.

ஜோதிட சாஸ்த்திரத்தில், எண் கணிதத்தில் "8"ம் எண்ணை சனீஸ்வரனுக்கு கொடுத்திருக்கிறார்கள்.

வியாதிகள் நீங்கவும், கடன் தொல்லை ஒழியவும், துர்தேவதைகளால் ஆபத்து நீங்கவும் சௌந்தர்யலஹரியில் உள்ள இந்த ஸ்லோகத்தை சொல்லலாம்.

**"த்வயா ஹ்ருத்வா:வாமம் வபு ராபரி திருப் தேந மநஸா**
**ஸரீரார்த்தம் சம்போ ரபரமபி ஸங்கே ஹ்ருதமபூத்!**
**ததா ஹித் வத்ரூபம் சகல மருணாபம் த்ரிநயனநம்**



**குசாப்யா மாநம்ரம் குடில சசி சூடால முகுடம்!"**

**"ஓம் சமக்நிரக் நிபிச்கரச் சன்ன ஸ்தபது சூர்யா:**
**சம்வாதோ வாதவரப அபச்ரித: ஸ்வாஹா!"**

என்கிற மந்திரத்தைச் சொல்லி ஹோமம செய்தால் ஒருவருக்கு இருக்கின்ற கஷ்டங்கள் விலகும், கஷ்டங்கள் வராது, நன்மைகள் கூடும்.

## சித்தன் அருள் - நவக்ரகங்கள் – ராகு



**கரவின் அமுதுண்டான் கார் நிறத்தான் மேனி**
**அரவம் முகம் அமரன் ஆனான்!**
**மருவுமுறம் ஆகும் - இருக்கையில் அஞ்சுதகு**
**தொடரத்தான் ராகு நிழற் கோள் என்றிசை!**



சாயாகிரகம் என்று அழைக்கப்படுபவர் ராகு. அசுரர் குலத்தில் உதித்தவர். இவருடைய தந்தை விப்பிரசித்தி, தாயார் சம்ஹிகை.

சிம்மாசனத்தில் வீற்றிருப்பார்; நான்கு கைகள் உண்டு. வரத முத்திரை; சூலம், கத்தி, கேடயம், இவற்றை தாங்கிய கோலம்.

கவசம், மந்திரம், இவற்றிற்குரிய த்யானங்களைப் பெற்றவர். "ராகும் சதுர்புஜம் சர்ம சூல கட்க வராங்கிதம்" என்றும், "கராளவதனம் கட்க சர்ம சூழ வராந்விதம்" என்றும் ராகுவைப் பற்றி சில்பரத்னம் கூறுகிறது.

புகை நிறமான ஆடை, நீல நிறமான புஷ்பம், சந்தனம், மாலை, கொடி, குடை, தேர் முதலியவற்றைக் கொண்டவர். மேருமலையை அப்பிரதட்ச்சிணமாக சுற்றுபவர். பைஷீஸை கோத்திரத்தில் பிறந்தவர்.

புராணத்தில், ராகு, கேது இருவருக்கும் "ரேவதி" நட்ச்சத்திரம் என்று கூறுகிறது. ஆனால் நவக்ரக ஆராததிக் கிரமத்தில் கேதுவுக்கு என்று ஒரு தனி நட்சத்திரம் உண்டு. உத்திராட நட்சத்திரத்திற்கும், திருஓண நட்சத்திரத்திற்கும் இடையில் உள்ள நட்சத்திரத்தில் பிறந்தவர்தான் கேது. அது 28வது நட்சத்திரம் என்று கூறுகிறது.

பாபர தேசாதிபதி. சூரியனுக்கு தென்மேற்குத் திசையில் சூர்ப்பாகார மண்டலத்தில் தெற்கு முகமாக இருப்பவர். இவருடைய மண்டலம் "முறம்" போன்று காணப்படும். ராகுவிற்கு சமித்-அருகு, உலோகம்-ஈயம், வாகனம்-ஆடு, துர்காதேவி இவருக்கு அதிதேவதை, சர்ப்ப ராஜன்-ப்ரத்யாதி தேவதை.

ஞானத்தை வழங்குகிறவன் என்பதால் ராகுவை "ஞானகாரகன்" என்பர்.

தேவர்களும், அசுரர்களும் சேர்ந்து திருப்பாற்கடலை கடைந்த பொழுது, அதிலிருந்து அமுதம் உண்டாயிற்று.

இந்த அமுதத்தை உண்டால் அவர்களுக்கு மரணமே இல்லை என்றும், சிரஞ்சீவியாக பலத்தோடு காணப்படுவார்கள். இவர்களை யாராலும் வெல்ல முடியாது என்றும் விஷயத்தைத் தெரிந்து அந்த அமிர்தத்தை உண்ண தேவர்களும், அசுரர்களும் போட்டி போட்டு வந்தனர்.



அப்பொழுது திருமால் "மோகினி" என்ற பெயரோடு யாவர் உள்ளத்தையும் மயக்கும் எழிலோடு உருவம் எடுத்தார்.

தேவர்களுக்கு மாத்திரம் அமுதம் கொடுக்க எண்ணிய மோகினி, அசுரர்களிடம் இனிமையாகப் பேச்சுக் கொடுத்து வரிசையாக உட்காரும்படியாகச் சொன்னாள்.

அவர்கள், "நான் முந்தி, நீ முந்தி" என்று போட்டி போட்டுக் கொண்டு உட்காருவதற்குள், தேவர்களுக்கு அமுதம் வழங்கி விட்டாள், மோகினி.

இதனை அறிந்த ராகு என்று அசுரன் தேவ உருவத்தை எடுத்துக் கொண்டு சூரியனுக்கும், சந்திரனுக்கும் நடுவில் இருந்து அமுதத்தை உண்ணத் தொடங்கினான். ராகு, அசுரன் என்பதை அறிந்த சூரியனும், சந்திரனும், ராகுவை மோகினிக்கு குறிப்பாகச் சுட்டிக் காட்டினார்கள்.

விஷயத்தை அறிந்த மோகினி, தன் கையில் இருந்த கரண்டியால் ராகுவை அடித்தாள். திருமாலுக்கு உரிய சக்கரத்தால் ராகுவின் தலையை அறுத்தாள்.

அமுதத்தை உண்டதினால் அசுரனுடைய தலை மலையின் கொடு முடிபோல் பெரிதாக இருந்தது. அது அறுந்து நிலத்தின் மீது விழும் பொழுது தரை முழுவதும் பூகம்பம் உண்டானாற்போல் அதிர்ந்தது.

தலையுடன் இரண்டு கைகளும் சேர்ந்து விழுந்தன. மற்றப் பகுதி தனியாக வேறு இடத்தில் விழுந்தது. அப்பொழுது பைடினஸன் என்பவன் ராகுவின் தாயாரான சிம்ஹிகையுடன் போய்க்கொண்டிருந்தான். கீழே விழுந்த ராகுவை அவர்கள் தங்களுடன் அழைத்துச் சென்றனர்.

அமுதத்தை அரை குறையாக உண்டமையால் ராகுவிற்கு மரணமில்லை. சாகாமல் வளர்ந்தான். அவன் முகத்தில் அமரர் களையும், உடலில் பாம்பாகவும் இணைந்தது.



தன்னை காட்டிக் கொடுத்த சூரிய சந்திரர்களை பழிக்குப்பழி வாங்கத் துடித்தான். அவர்களை முழுங்கவும் த்டிதுடித்து முயற்சி செய்தான். அதைத்தான் நாம் சூரிய கிரகணம், சந்திர கிரகணம் என்கிறோம்.

பின்னர் திருமாலை நோக்கி கடுமையாக தவம் இயற்றினான். திருமால் அவனுக்கு கிரக பதவியை கொடுத்தார்.

ராகுவையும், கேதுவையும், கிரகங்கள் என்று குறிப்பிடுவதில்லை. இவர்களை "சாயா கிரகம்" என்று சொல்வார்கள்.

ராகுவிற்கு மந்திரம் "கயானச் சித்ர" என்று தொடங்கும் மந்திரம். இந்த மந்திரத்தின் ரிஷி வாமதேவர். சந்தம் காயத்ரி, நிருதி திசைக்கு உரியவன்.

கருஞ்சந்தனம், கரியமலர், கரியமாலை, கரிய உடை, கரிய கொடை, கரிய கொடி ஆகியவை இவனுக்கு உரியது.

ராகுவின் அதிதேவதை பசு, ப்ரத்யாதி தேவதை சர்ப்பம் என்றும் கூறுவார்கள். இவனுக்கு அமுத கடிகன் என்கிற பிள்ளை உண்டு. தாமத குணம் கொண்டவன். கருங்கல், கோமேதகம் ராகுவிற்கு உரியது.

இவரது தானியம் கருப்பு உளுந்து, மந்தாரை மலர், அருகு இவை ராகுவின் அர்ச்சனைக்கு உரிய மலராகும்.

ராகுவின் த்யான ஸ்லோகத்தில் "கரிய சிங்காசனத்தில் வீற்று இருப்பவன், பாம்பு உருவமுடையவன், சிம்ஹிகையின் திருமகன், பக்தர்களுக்கு அபயம் தருபவன்" என்ற செய்திகள் வருகின்றன.

**"நகத்வஜாய வித்மஹே பத்மஹஸ்தாய தீமஹி**
**தந்நோ ராஹு ப்ரசோதயாத்"**

என்பது இவருக்குரிய காயத்ரி மந்திரம்.

ராகுவின் திருத்தலங்கள் திருநாகேஸ்வரம் மற்றும் ஸ்ரீகாளஹஸ்தி.



திருநாகேஸ்வரம், கும்பகோணத்திற்கு பக்கத்தில் இருக்கிறது. இங்கு ராகு பெருமானுக்கு தனிச் சன்னதி உண்டு. ராகு காலங்களில் அபிஷேகம் நடைபெறும். பாலை அபிஷேகம் செய்யும் பொழுது நீல நிறமாக மாறும்.

ஸ்ரீகாளஹஸ்த்தி, ஆந்திரா மாநிலத்தில், சித்தூர் மாவட்டத்தில் இருக்கிறது. திருப்பதிக்கு செல்லும் வழியில் 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அங்குள்ள ஞானாம்பிகா - ராகுவின் அதிதேவதை. இங்கு சென்று அர்ச்சனை செய்யலாம். ராகு தோஷம் நீங்கும்.

ஜோதிட சாஸ்த்திரத்தில், "4"ம் எண்ணை ராகுவுக்கு கொடுத்துள்ளனர்.

திருவாதிரை, சுவாதி, சதயம் ஆகிய மூன்று நட்ச்ச்சத்திரங்களுக்கு ராகு அதிபதி.

ஜோதிட சாஸ்த்திரத்தில் கூறப்பட்ட மேலும் சில தகவல்கள்.

ராகு பாதி உடல் கொண்டவன். பெரும் வீரன், அசுர ஸ்திரீயின் கர்பத்தில் பிறந்தவன். அரசாங்க பதவி, புகழ், ஆற்றல் மிகுந்த அதிகார பதவிக்கும் ராகு காரணம். அலைச்சலை உண்டு பண்ணுபவன். அறிவு ஜீவியாக மாற்றுபவன்.

பெண்கள் சுகம் தருபவன். கணக்கு சரிபார்த்து குறுக்கு வழியில் கோடீஸ்வரராக மாற்றுபவன். படிப்புக்கு சத்ரு. சனியின் குணங்கள் இவனுக்கு பெருமளவு உண்டு. அலியாக குணம் கொண்டவன். தாமச குணம் இவனுக்கு உண்டு.

தென்மேற்குத் திசைக்கு உரியவன். பஞ்ச பூதங்களில் வானமாக காணப்படுபவன். நீச பாஷைகளுக்கு உரியவன். குரூர சுபாவம் உடையவன். புளிப்பை விரும்பி சாப்பிடுவான்.

கோமேதக ரத்தினம் இவனுக்குரியது. உலோகங்களில் கருங்கல். விருச்சிகம் உச்ச வீடு. ரிஷபம் நீச வீடு. கன்னி இவனுக்கும் சொந்த வீடு என்று சொல்லப்படுகிறது.



கலப்பு திருமணத்திற்கு காரணமானவன். தடிப்பான வார்த்தைகளைப் பேச வைப்பவன். கெட்ட சகவாசமும் இவனுக்கு மிகவும் பிடிக்கும். சர்ப்பங்கள், விதவைகள் இவர்கள் மீது ராகுவுக்கு பிடித்தம் உண்டு.

புதன், சுக்கிரன், சனி ஆகிய மூவரும் ராகுவிற்கு நண்பர்கள். குரு, சூரியன், சந்திரன் மூன்றுபேரும் பகைவர்கள். வாதம், கபம் இரண்டிலும் உபாதை தரக்கூடியவன். உடம்பில் எலும்பாக கருதப்படுகிறவன்.

சாயா கிரகம் என்று புகழ் பெற்றவன். வியாதியை தீர்ப்பவன். அச்சத்தை போக்குபவன். மொழியை தரக்கூடிய வில்லோன் என்று ராகுவைப் பற்றி ஜோதிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

எந்த காரியத்தில் இறங்கினாலும், வெற்றி அடைய வேண்டுமானால், கீழ்கண்ட சௌந்தர்யலஹரியில் உள்ள ஸ்லோகத்தை தினமும் சொல்லிவருவது நல்லது.

**"விரிஞ்சி பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப் நோதி விரதிம்**
**விநாசம் கீநாஸோ பஜதி தநதோ யாதி நிதனம்!**
**விதந்த்ரி மாஹேந்த்ரி விததிரபி ஸம்மீலதி திருஸாம்**
**மகா சம்ஹாரே ஸ்மிந் விஹரதி சதி த்வத்பதி ரஸௌ!**

# சித்தன் அருள் - நவக்ரகங்கள் - கேது!



ஜோதிட சாஸ்த்திரத்தில் கேதுவை பற்றி சொல்லப்பட்டிருக்கின்ற செய்திகள் எல்லாம் ஏறத்தாழ இராகு பெருமானுக்கு சொல்லப்பட்டது போல்தான் காணப்படுகிறது.



பூப்போன்ற செந்நிறம் உடையவன், நட்சத்திரங்கள், கிரகங்களில் தலையானவன். கோபம் கொண்டவன். வேத, வேதாந்த அறிவு நுட்பங்களுக்கும், மோட்சத்திற்கும் காரணமாக இருப்பவன்.

விஞ்ஞான ஆற்றலுக்கும் கேதுதான் காரணம். சிவபக்தியில் ப்ரியமுள்ளவன். எளிமை + கடுமை இரண்டையும் கொண்டவன், உலக பந்தங்களில் இருந்து விடுவிப்பவன்.

பசிக்கு அதிபதி. பகைவரை வெல்லுவதில் தீவிரம் கொண்டவன்.

காய்ச்சல், கண்நோய், புண் இவைகளின் அதிபதியாகவும் விளங்குபவன். அலியாக காணப்படுகிறவன். தகாத உறவை ஏற்படுத்தி தொல்லையும் கொடுப்பவன்.

விருச்சிகத்தில் உச்சமானவன். ரிஷபத்தில் நீசமானவன். மீனத்தை சொந்தவீடாக கொண்டவன். இவனது ரத்தினம் "வைடூரியம்" பாவக் கிராகமாகச் செயல்பட்டாலும், பாவ விமோசனமும் தருகிறவன். அதனால் இவன் விக்ன - விநாயகன் போல் இருப்பதால், விநாயகன் என்றும் கூறுவார்கள். வெள்ளிக்கிழமை பிள்ளையாரை, கேது பகவானின் அம்சம் என்று சொல்வார்கள்.

புதன், சுக்கிரன், சனி மூவரும் கேதுவுக்கு நண்பர்கள்.

குரு,சூரியன், சந்திரன் பகைவர்கள்.

கேது, ஞானகாரகன். விநாயகர் கேதுவின் ஸ்வரூபம் என்றும் சொல்லப்படுவதுண்டு. அம்பாளை துதித்தாலும், பரிகாரம் பண்ணினாலும், கேதுவிற்கு பரம திருப்தியாகும். அப்படிப்பட்ட கேது இல்லாவிட்டால், கடவுள் பக்தியும், ஞானமும் மனிதர்களுக்கு இவ்வுலகில் ஏற்பட்டிருக்காது.



எந்த காரியம் வெற்றி அடைய வேண்டுமானாலும், கேதுவை நமஸ்காரம் செய்து கொள்வது நல்லது. அந்த கெதுதான் விநாயகர் ஆகும்.

ஜோதிட சாஸ்த்திரத்தில் எண் "7"ஐ கேதுவுக்கு கொடுத்துள்ளனர்.

திருஞான சம்பந்தர் அருளிய கோளறு (கோள் + அறு) பதிகத்தை தினம் தோறும் பக்தி ச்ரத்தையுடன் பாராயணம் செய்பவர்களுக்கு எப்படிப்பட்ட இடரும், கோள், நாள் சரி இல்லை என்றாலும், அனைத்தும் சூரியனை கண்ட பனியைப் போல் விலகி நலம் விளைவிக்கும். இதை நித்ய பாராயணம் செய்து வருவது மிக நல்லது. அனைத்து அருளும் அவர்களை வந்து சேரும்.

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்

மிகநல்ல வீணை தடவி

மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்

உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி

சனிபாம் பிரண்டும் உடனே

ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல

அடியாரவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க

எருதேறி யேழை யுடனே

பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்

உளமே புகுந்த அதனால்



ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்

உடனாய நாள்க ளவைதாம்

அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல

அடியாரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து

உமையோடும் வெள்ளை விடைமேல்

முருகலர் கொன்றைதிங்கள் முடிமேலணிந்தென்

உளமே புகுந்த அதனால்

திருமகள் கலையதூர்தி செயமாது பூமி

திசை தெய்வமான பலவும்

அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே.

மதிநுதன் மங்கையோடு வடவா லிருந்து

மறையோது மெங்கள் பரமன்

நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்

கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்

கொடுநோய்களான பலவும்

அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல



அடியாரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டனெந்தை மடவாள் தனோடும்

விடையேறு நங்கள் பரமன்

துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்

வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்

மிகையான பூதமவையும்

அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே.

வாள்வரி அதளதாடை வரி கோவணத்தர்

மடவாள் தனோடும் உடனாய்

நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்

உளமே புகுந்த அதனால்

கோளரி உழுவையோடு கொலையானை கேழல்

கொடு நாகமோடு கரடி

ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே. செப்பிள முலைநன்மங்கை ஒருபாகமாக

விடையேறு செல்வ னடைவார்

ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்



உளமே புகுந்த அதனால்

வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்

வினையான வந்து நலியா

அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தென்று விடைமேலிருந்து

மடவாள் தனோடும் உடனாய்

வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்

உளமே புகுந்த வதனால்

ஏழ்கடல் சூழிலங்கை அரையன் றனோடும்

இடரான வந்து நலியா

ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்

பசுவேறும் எங்கள் பரமன்

சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்

மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்



வருகால மான பலவும்

அலைகடல் மேருநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு

குணமாய வேட விகிர்தன்

மத்தமும் மதியும்நாக முடிமேல் அணிந்தென்

உளமே புகுந்த அதனால்

புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்

திருநீறு செம்மை திடமே

அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல

அடியாரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி

வளர் செம்பொன் எங்கும் திகழ

நான்முகன் ஆதியாய பிரமா புரத்து

மறைஞான ஞான முனிவன்

தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து

நலியாத வண்ணம் உரைசெய்

ஆன சொல்மாலை யோதும் அடியார்கள் வானில்

அரசாள்வர் ஆணை நமதே.



இந்த பதிகத்தின் பொருள்...........

1. (எம்பெருமான்) மூங்கில் போன்ற தோளினை உடைய உமையவளுக்கு தன் உடம்பினில் பாகம் கொடுத்தவன். ஆலகால விடத்தை உயிர்களைக் காக்கும் பொருட்டு அருந்தி திருக்கழுத்தினில் தாங்கியவன். இனிமையான இசையை எழுப்பும் வீணையை வாசித்துக்கொண்டு (இருக்கும் அவன்) களங்கமில்லாத பிறையையும் கங்கையையும் தன் திருமுடி மேல் அணிந்து கொண்டு, என் உளம் முழுவதும் நிறைந்து காணப்படுவதால் (அதாவது நான் சிவசிந்தையில் இருப்பதால்) சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, மற்றும் பாம்பாகிய ராகு-கேது என்னும் ஒன்பது கோள்களும் ஒரு குற்றமும் இல்லாதவையாக (என் போன்ற) சிவனடியாருக்கு என்றும் மிக மிக நல்லதையே செய்யும்!

2. திருமாலின் வாமன, பன்றி, கூர்ம அவதாரங்களின் ஆணவத்தை அடக்கி அணிந்துநிற்கும், எலும்பு, கொம்பு, ஆமை ஓடு முதலானவை தன் திருமார்பில் விளங்க, உமையவளுடன் எருதின் மேல் ஏறி ,பொன்போலொளிரும் ஊமத்தைமலர்களாலான மாலைதரித்து, தலையில் கங்கையணிந்து என் உள்ளத்தே நிறைந்ததால்,ஒன்பதாவது விண்மீனாய் வரும் ஆயில்யம்; ஒன்பதோடு ஒன்று - பத்தாவது விண்மீனான மகம்;ஒன்பதொடு ஏழு-பதினாறாவது விண்மீனான விசாகம்; பதினெட்டாவது விண்மீனான கேட்டை; ஆறாவது விண்மீனான திருவாதிரை;

முதலான பயணத்திற்கு விலக்கப்பட்ட நாட்கள் எல்லாமும், சிவனடியார் மீது அன்பொடு அவர்க்கு என்றும் நல்லதையே செய்யும்!



3.பவளம் போன்ற சிவந்த திருமேனியில் ஒளி பொருந்திய வெண்ணீற்றை அணிந்து, சிவபெருமான் உமையம்மையாரோடு வெள்ளை எருதின்மீது ஏறி வந்து, அழகு பொருந்திய கொன்றையையும் சந்திரனையும் தன் முடிமேல் அணிந்து சிவபெருமான், உமையம்மையாரோடு வெள்ளை எருதின்மீது ஏறி வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், இலக்குமி, கலைகளை வாகனமாகக் கொண்ட கலைமகள், வெற்றித்தெய்வமான துர்க்கை, பூமாது, திசைத் தெய்வங்கள் ஆன பலரும் அரிய செல்வம் போல நன்மை அளிப்பர். அடியவர்களுக்கு மிக நல்லதையே செய்வர்.

4.பிறைபோன்ற நெற்றியை உடைய உமையம்மையாரோடு ஆலமரத்தின்கீழ் இருந்து (வடம் - ஆலமரம்) வேதங்களை அருளிய எங்கள் பரமன், கங்கைநதியையும் கொன்றைமாலையையும் முடிமேல் அணிந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், ஆத்திரமுடையதான காலம், அக்கினி, யமன், யமதூதர், கொடிய நோய்கள் எல்லாம் மிக நல்ல குணமுடையன ஆகி நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிகவும் நல்லனவே செய்யும்.

5.விடத்தைக் கழுத்தில் அணிந்த நீலகண்டனும், என் தந்தையும், உமையம்மையாரோடு இடபத்தின்மேல் ஏறி வரும் நம் பரம்பொருள் ஆகிய சிவபெருமான், அடர்ந்து கறுத்த வன்னிமலரையும், கொன்றை மலரையும் தன் முடிமேல் அணிந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், கொடிய சினத்தை உடைய அசுரர்கள், முழங்குகிற இடி, மின்னல், துன்பந்தரும் பஞ்சபூதங்கள் முதலானவையெல்லாம் (நம்மைக் கண்டு) அஞ்சி நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிக நல்லனவே செய்யும்.



6.ஒளியும் வரியும் பொருந்திய புலித்தோல் ஆடையும்(வாள் -வரி - அதள் - அது -ஆடை; அதள் -புலித்தோல்), வரிந்து கட்டிய கோவணமும் அணியும் சிவபெருமான் அன்றலர்ந்த மலர்கள், வன்னி இலை, கொன்றைப்பூ, கங்கை நதி ஆகியவற்றைத் தன் முடிமேல் சூடி, உமையம்மையாரோடும் வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், கொல்லும் வலிய புலி(கோளரி உழுவை), கொலையானை, பன்றி(கேழல்), கொடிய பாம்பு, கரடி, சிங்கம்ஆகியன நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிக நல்லனவே செய்யும்.

7.செம்பு போன்ற இளந்தனங்களை உடைய உமையவளைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு, இடபத்தின்மேல் ஏறிவரும் செல்வனாகிய சிவபெருமான் தன்னை அடைந்த அழகிய பிறைச்சந்திரனையும், கங்கையையும் தன் முடிமேல் அணிந்தவனாய், என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், காய்ச்சல்(சுரம்), குளிர்காய்ச்சல், வாதம், மிகுந்த பித்தம் , அவற்றால் வருவன முதலான துன்பங்கள் நம்மை வந்து அடையா. அப்படி அவை நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு அவை நல்லனவே செய்யும்.

8. அன்று மன்மதன் அழியும்படி நெற்றிக்கண்ணைத் திறந்து எரித்த சிவபெருமான், இடபத்தின்மேல் உமையம்மையாரோடு உடனாய் இருந்து, தன் முடிமேல் ஒளி பொருந்திய பிறைச்சந்திரன், வன்னி இலை, கொன்றை மலர் ஆகியனவற்றைச் சூடி வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், ஏழ் கடல்களால் சூழப்பட்ட இலங்கையின் மன்னன் ஆன இராவணன் (பிறன்மனை நாடியதாலேற்பட்டது) போன்ற இடர்களும் வந்து நம்மைத் துன்புறுத்தா. ஆழமான கடலும் நமக்கு நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு அவை நல்லனவே செய்யும்.



9.பல்வேறு கோலங்கள் கொள்கிற பரம்பொருள் ஆகிறவனும், மாதொருபாகனும், எருதின்மேல் ஏறிவரும் எங்கள் பரமனுமாகிய சிவபெருமான், தன் முடிமேல் கங்கை, எருக்கமலர் ஆகியவற்றை அணிந்து வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், தாமரைமலர்மேல் உறையும் பிரமன், திருமால், வேதங்கள், தேவர்கள் ஆகியோரும், எதிர்காலம், அலையுடைய கடல், மேருமுதலான மலைகள் ஆகியவையும் நமக்கு நல்லனவே செய்வர். அடியவர்களுக்கு அவை மிகவும் நல்லனவே செய்யும்.

10.கூந்தலில் மலர்க்கொத்துகள் அணிந்த உமையம்மையாரோடு வேட வடிவில் சென்று அருச்சுனனுக்கு அருள்புரிந்த தன்மை கொண்ட சிவபெருமான், தன் முடிமேல் ஊமத்தை மலர், பிறைச்சந்திரன், பாம்பு ஆகியவற்றை அணிந்து வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், புத்தர்களையும் சமணர்களையும் ஈசனின் திருநீறு வாதில் தோற்றோடச் செய்யும். அதன் பெருமை நிச்சயமே. எல்லாம் அப்படிச் சிறந்த நல்லனவற்றையே செய்யும். அவை மிகவும் நல்லனவே செய்யும்.

11.தேன் நிறைந்த பூங்காக்களைக் கொண்டதும், கரும்பும்(ஆலை), விளைகிற செந்நெல்லும் நிறைந்துள்ளதும், பொன் போல் ஒளிர்வதும், நான்முகன் (வழிபட்ட) காரணத்தால் பிரமாபுரம் என்ற ஊரில் தோன்றி அபரஞானம் பரஞானம் ஆகிய இரு வகை ஞானங்களையும் உணர்ந்த ஞானசம்பந்தனாகிய யான், தாமே வந்து சம்பவிக்கும் நவக்கிரகங்கள், நாள் நட்சத்திரம், போன்றன எல்லாம் அடியவரை வந்து வருத்தாதவாறு பாடிய இப்பதிகத்தை ஓதும் அடியவர்கள் வானுலகில் அரசு புரிவர். இது நமது ஆணை.

**[ இத்துடன் நவக்ரகங்கள் தொடர் நிறைவு பெற்றது! ]**